# உதயன்

சுடர் : 36 | கதிர் : 120 | சனிக்கிழமை | பங்குனி 14 ஆம் நாள் 27 மார்ச் 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 20 | விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111


## காலை ஒன்றுகூடல் நடத்துவதற்குத் தடை

கொழும்பு, மார்ச் 27
பாடசாலைகளில் இடம் பெறும் காலை நேரப் பிரார்த்தனைகளுக்கு மாணவர்களை ஒன்றிணைப்பதைத் தவிர்க்க வேண்டும் என்று வடக்கு 19

# யாழ். போதனாவுக்குள் புகுந்தது கொரோனா!

**நோயாளர்கள், மருத்துவர்கள், தாதியர் என 19 பேருக்கு நேற்றுத் தொற்று உறுதி**

யாழ்ப்பாணம், மார்ச் 27
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 19 பேருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை நேற்றுக் கண்டறியப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். 19

## தவறான முடிவெடுத்து இளைஞர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 27
தாவடி தெற்கு, கொக்குவில் மத்தியில் இளைஞர் ஒருவர் வீட்டில் இருந்து சடலமாக மீட்கப்பட் 19

## மயங்கி வீழ்ந்தவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 27
சைக்கிளில் சென்றபோது மயங்கி விழுந்தவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். இந்தச் 19

## படை வாகனம் மோதி பண்டிதர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 27
படையினரின் வாகனம் மோதியதில் விபத்துக்குள்ளான அர்ச்சகர் ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். பொன்னாலை சித்தி விநாயகர் ஆலய அர்ச்சகரும், பண்டிதருமான பொன்னம்பலவாணர் (வயது-77) என்ப 19



## முடக்கப்பட்ட நகர்ப் பகுதியில் தொற்று நீக்கும் நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 27
யாழ்ப்பாண மாநகரின் மத்திய பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டுள்ள நிலையில், நேற்று அந்தப் பகுதிகளில் கிருமி நாசினி விசிறும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.
யாழ். மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது. அதையடுத்து நேற்றுமுன்தினம் மாவட்ட கொரோ 19

## இரு வயது சிறுமிக்கும் தந்தைக்கும் தொற்று!

வவுனியா, மார்ச் 27
வவுனியாவில் இரு வயதுச் சிறுமிக்கும், தந்தைக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
முருகனூர் பகுதியைச் சேர்ந்த இரு வயதுச் சிறுமிக்கும், சிறுமியின் 34 வயதான தந்தைக்குமே தொற்று உறுதி 19



## கொரோனா சந்தடியில் நிலாவரையில் அகழ்வு

மக்களின் எதிர்ப்பால் தற்காலிகமாக நிறுத்தம்

யாழ்ப்பாணம், மார்ச் 27
யாழ்ப்பாணம் நிலாவரை பகுதியில் தொல்பொருள் திணைக்களத்தினர் நேற்று மீண்டும் அகழ்வுப் பணிகளை முன்னெடுத்தனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. நிலாவரை கிணற்றுக்கு அரு 19

## மருத்துவமனைக்கு தேவையற்று வருவதைத் தவிர்க்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 27
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சேவைகளை தொடர்ச்சியாக முன்னெடுக்க வசதியாக தேவையற்ற வருகைகளைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று நிர்வாகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.
அதேநேரம் போதனா மருத்துவமனையின் சத்திர சிகிச்சை உள்ளிட்ட அனைத்து மருத் 19

## இத்தாவிலில் நேற்றுக் கோர விபத்து இரு பிள்ளைகளும், தந்தையும் சாவு!

யாழ்ப்பாணம், மார்ச் 27
பளை, இத்தாவில் நல்லம்மாதோட்டம் பகுதியில் நேற்றிரவு நடந்த விபத்தில் இரு பிள்ளைகளும், தந்தையும் உயிரிழந்துள்ளனர்.
காரும், டிப்பரும் மோதி இந்த விபத்து நடந்துள்ளது. காரில் சென்றவர்களே உயிரிழந்துள்ளனர். இத்தாவில், பெரிய தாமகேணியைச் 19

## சிறிதரன் வீட்டுக்குள் புகுந்து ஆயுதக் கும்பல் அட்டகாசம்!

யாழ்ப்பாணம், மார்ச் 27
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் வீட்டுக்குள் ஆயுதங்களுடன் புகுந்த 8 பேர் கொண்ட கும்பல், தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.
இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது. 4 மோட்டார் சைக்கிள்களில் கூரிய ஆயுதங்களுடன் வந்த 8 பேர் கொண்ட 19

## எல்லைதாண்டி மீன்பிடித்த தமிழக மீனவர் விடுதலை

யாழ்ப்பாணம், மார்ச் 27
இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 54 பேரில், 40 பேர் நேற்று விடுவிக்கப்பட்டனர். ஏனைய 14 பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வனவளத் திணைக்களத்தினர் குமுழமுனையில் அடாவடி !

## ஒருவர்மீது வழக்குத் தாக்கல்

**முல்லைத்தீவு, மார்ச் 27**

**முல்லைத்தீவு குமுழமுனை ஆண்டான்குளம் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் தமது பூர்வீகக் காணிகளில் குடியேறுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வந்த நிலையில், வன ஜீவராசிகள் திணைக்களத்தினரும் இராணுவத்தினரும் வனவளத் திணைக்களத்தினரும் இணைந்து மக்களுக்குத் தடை ஏற்படுத்தி இடையூறு புரிந்துள்ளனர் என்று பாதிக்கப்பட்ட தரப்பினர் விசனம் தெரிவித்தனர். குடும்பப் பெண்ணொருவரை வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரி தாக்க முற்பட்டதோடு, ஒருவரைக் கைதுசெய்து வழக்குத் தாக்கல் செய்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.**



இது தொடர்பில் கைதுசெய்யப்பட்ட குடும்பத் தலைவரின் மனைவி தெரிவித்தாவது:

"1984 ஆம் ஆண்டு இராணுவத்தினர் குமுழமுனை ஆண்டான்குளம் கிராம மக்களை விரட்டியடித்து எங்கள் வீடுகளுக்குத் தீ வைத்தனர். நாங்கள் இடம்பெயர்ந்து வேறு பகுதிகளில் 30 வருடங்களுக்கும் மேலாக வசித்து வந்தோம். போருக்குப் பின்னர் எமது கிராமம் மீள்குடியேற்றம் செய்யப்பட்டபோதிலும் அங்கு சென்று குடியேறவோ தற்காலிக வீடுகளை அமைக்கவோ இராணுவத்தினரும் வனவளத் திணைக்களத்தினரும் தடைகளை ஏற்படுத்தி வந்தனர். இருந்தபோதிலும் எமது பூர்வீகக் கிராமத்துக்குச் சென்று காணிகளை சுத்தம்செய்து தற்காலிகமாக வீடுகளை அமைத்துக் குடியேற நாம் தற்போது தயாராகி வந்தோம். இந்த நிலையில் இராணுவத்தினர், மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் ஆகியோர் இணைந்து எமது நடவடிக்கைகளுக்குத் தடை விதித்ததோடு, எனது கணவரையும் பலவந்தமாகக் கைதுசெய்து வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

நேற்று (நேற்றுமுன்தினம்) மாலை இராணுவத்தினர் பொலிஸார் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் ஆகியோர் வருகை தந்து, காணியில் வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த எம்மை அச்சுறுத்தி எமது தற்காலிக வீட்டின் உள்ளே இருந்த பொருள்களை எடுத்துச் சென்றனர். அத்தோடு எனது கணவரையும் இன்னொருவரையும் கைதுசெய்தனர். காணியை விட்டு வெளியேறவேண்டும். இங்கு யாரும் குடியமர நினைக்கக்கூடாது என அச்சுறுத்தினர். வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரி ஒருவர் என்னைத் தாக்கவும் முயற்சித்தார்" - என்று தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்துக்குப் பின்னர் அந்தப் பகுதிக்கு வருகைதந்த கரைதுறைப்பற்று காணிப்பகுதி அதிகாரிகள் "எதிர்வரும் 14 நாள்களுக்கு எந்தவிதமான அபிவிருத்தி வேலைகளிலும் கிராம மக்கள் ஈடுபடக்கூடாது. இங்கு மக்களின் காணிகள் தொடர்பாக அடையாளம் காண்பித்த பின்னரே வேலைகளைச் செய்யலாம்" என்று கூறிச் சென்றனர் என கிராம மக்கள் தெரிவித்தனர்.

இந்தநிலையில் குறித்த பகுதிக்கு நேற்று வருகைதந்த இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் புலனாய்வாளர்கள் ஆகியோர் மக்களின் ஆவணங்களைப் பதிவு செய்தனர். (கு-19)

---

*கிராமங்கள் தோறும்*

# சர்வதேச தரத்திலான முன்பள்ளிகள் வரும்!

கொழும்பு, மார்ச் 27

முன்பள்ளிக் கல்வி தொடர்பில் தேசிய கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. அதன்படி, ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் சர்வதேச தரத்திலான முன்பள்ளிப் பாடசாலை ஒன்றை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வா தெரிவித்தார்.

முன்பள்ளிக் கற்றல் நடவடிக்கை தொடர்பான வரைபு கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. முன்பள்ளிக் கல்வி நடவடிக்கைகளை முறைசார்ந்ததாக மேற்கொள்ளும்தேசிய கொள்கையொன்று இதுவரையிலும் இருந்ததில்லை. எனவே முறை சார்ந்த கொள்கை நிபுணர் குழுவொன்றின் மூலம் வகுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் தரமான பாலர் பாடசாலையொன்றை ஆரம்பித்து சர்வதேச தரத்துக்கு அமைவாக நடத்தப்படும். பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு கொடுப்பனவொன்றை வழங்கவும் அரசு கவனம் செலுத்தியுள்ளது. - என்று அவர் மேலும் தெரிவித்தார். (கு-இ)

---

## கஜேந்திரன் எம்.பிக்கு அனுமதி மறுப்பு!

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செ.கஜேந்திரன், காலி மாவட்டம் தங்காலையில் அமைந்துள்ள சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளைப் பார்வையிட அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை அவர்களின் உறவினர்கள் மட்டுமே பார்வையிட முடியும் என்று கூறி தனக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் வசித்து வந்த செல்வராசா உதயசிவம் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கடந்த வருடம் மார்ச் 4 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றார். (ற26)

---

# ஆற்றல் நிறைந்த பெரியாரை இழந்துள்ளது எமது மண்

## பண்டிதர் பொன்னம்பலவாணரின் மறைவுக்கு ஆறு.திருமுருகன் இரங்கல்

யாழ்ப்பாணம், மார்ச் 27

பொன்னாலை சைவப் பெரியார், சித்திவிநாயகர் ஆலய பரிபாலகர், பண்டிதர் தி.பொன்னம்பலவாணர் நேற்று இறையடியில் நிரந்தர ஆறுதல் பெற்றார். ஆற்றல் நிறைந்த பெரியாரை எம்மண் இழந்துள்ளது. என்று கலாநிதி ஆறு.திருமுருகன் அஞ்சலி இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இவர், சிறந்த தமிழறிஞராகவும் சைவசித்தாந்தத் துறையில் நிறைந்த புலமைமிக்கவராகவும் விளங்கியவர். ஈழநாடு பத்திரிகையில் பல வருடங்கள் பணியாற்றிய பெருந்தகை. புராணப் படிப்பில் வித்தகராக விளங்கிய இவர் பல சமயக் கட்டுரைகளை எழுதியுள்ளார். சிவத்தமிழ்ச்செல்வி அன்னையின் நினைவாக சிவத் தமிழ் விருது இவருக்கு வழங்கப்பட்டது. பல கௌரவங்களைப் பெற்ற இந்தப் பெரியார் யாழ். சிவதொண்டன் நிலையத்துக்கு வருகை தந்து, திரும்பி மோட்டார் சைக்கிளில் செல்லும் போது ஏற்பட்ட விபத்தில் காயமுற்று ஆறு தினங்கள் மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வந்த நிலையில் நேற்று மாலை அவரது உயிர் பிரிந்தது. ஆற்றல் நிறைந்த பெரியாரை எம்மண் இழந்துள்ளது. - என்றுள்ளது. (கு)

---

# நாயைக் கொன்று பசியாறிய நாய்கள்

## உரிமையாளருக்கு வழக்கு

கொழும்பு,மார்ச் 27

நீண்ட நாள்கள் பசியுடன் வாடிய நாய்கள், தம்முடன் சேர்ந்திருந்த நாயைக் கொன்று தமக்கு உணவாக்கிக் கொண்டன. அவற்றைப் பராமரித்த உரிமையாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்தச் சம்பவம் மொறட்டுவ கல்டெமுல்லப் பகுதியில் பதிவாகியுள்ளது. 5 நாய்களை வளர்த்து வந்த நபர், ஒரு வாரமாக அவற்றுக்கு உணவு வழங்காமல் அடைத்து வைத்துவிட்டு, வேறு இடத்தில் தான் வசித்து வந்துள்ளார். இதனை அவதானித்த அந்தப் பகுதி மக்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். உரிமையாளருக்கு எதிராக, மொறட்டுவ நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

உரிமையாளர் பிணையில் விடுவிக்கப்பட்டார். நாயின் இறப்புக்கான காரணத்தை அறியுமாறும், நாய்களை சரிவர பராமரித்து உணவு வழங்கி இருந்தாரா என்பது தொடர்பிலும் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (க-இ)

---

# வடக்கில் கண்புரை சத்திர சிகிச்சை அவசியமானோர் பதிவுசெய்யவும்

## மாகாண சுகாதாரப் பணிப்பாளர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 27

எதிர்வரும் மே மாதமளவில் கண்புரை சத்திர சிகிச்சை முகாம்களை 3 கட்டங்களாக நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே கண்புரை நோயால் அவதியுறும் நோயாளர்கள் தத்தமது பகுதிகளில் பதிவுசெய்து கொள்ளுமாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் அறிவுறுத்தியுள்ளார்.

வடமாகாண சுகாதாரத் திணைக்களமும் யாழ் போதனா வைத்தியசாலையும் இணைந்து இதனை நடத்துகின்றன. எனவே கண்புரை நோயால் அவதியுறும் நோயாளர்கள் தத்தமது பிரதேசத்துக்கு அருகில் இருக்கும் மாவட்டப் பொது மருத்துவமனைகள் (கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார்) ஆதார மருத்துவமனைகள் (பருத்தித்துறை, தெல்லிப்பழை, சாவகச்சேரி, மாங்குளம், புதுக்குடியிருப்பு) அல்லது யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் கண்புரை சத்திரசிகிச்சை செய்துகொள்ள முடியும் என்று மாகாணப் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார். (கு)

---

## கிளிநொச்சியில் மழை நீர் சேகரிப்பு மன்ற வள நிலையம்

இலங்கை மழை நீர் சேகரிப்பு மன்றத்தின் வள நிலையம் கிளிநொச்சியில் நேற்றுத் திறக்கப்பட்டது.

கிளிநொச்சி தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அலுவலகத்தின் ஒரு பகுதியில் அமைக்கப்பட்ட அந்த நிலையம் இலங்கை மழைநீர் சேகரிப்பு மன்றத்தின் தலைவரால் திறப்பட்டது.


நிகழ்வில் பிராந்திய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபையின் பிரதம பொறியியலாளர், கிளிநொச்சி மாவட்டச் செயலக திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட இடர் முகாமைத்துவ நிலைய உத்தியோகத்தர், உட்பட பலரும் கலந்து கொண்டனர். (பு-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாக்குளத்தின் ஆக்கிரமிப்பை நிறுத்தக்கோரி போராட்டம் ஆரம்பம்!!

**வவுனியா, மார்ச் 27**

**வவுனியாக்குளத்தின் ஆக்கிரமிப்பை நிறுத்தக்கோரிய சத்தியாக்கிரகப் போராட்டம் வவுனியா மாவட்டசெயலகத்துக்கு முன்பாக நேற்றுக் காலை ஆரம்பிக்கப்பட்டது. வவுனியாக் குளத்துக்கான மக்கள் செயலணியால் இந்தச் சத்தியாக்கிரகப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**



இதன்போது போராட்டக்காரர்கள் கருத்து தெரிவித்ததாவது,
வவுனியா மாவட்டத்தில் குடிநீர்த் தேவைக்கான நிலத்தடி நீருக்கும், விவசாய நீர்ப்பாசனத்துக்கும் மற்றும் கால்நடை வளர்ப்புக்கும் குளங்களே ஆதாரமாகவுள்ளன.
இந்த நிலையில் வவுனியாவிலுள்ள பல குளங்களும் விவசாய நிலங்களும் ஆக்கிரமிக்கப்பட்டு எங்கள் கண்முன்னாலேயே இல்லாமல் போய்க்கொண்டிருக்கின்றன.
தற்போது சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள சுற்றுலா மையம் வியாபார நோக்கில் தொடர்ந்து விஸ்தரிக்கப்படுமாயின் குளத்தின் நீரேந்துப் பகுதி மென்மேலும் குறைவடைந்து செல்லும் அபாயமுள்ளதையும், சுற்றுலா மையத்தின் குத்தகைக்காரர் நகரசபையுடன் செய்துகொண்ட உடன்படிக்கைகளை மீறிக் கட்டடங்களை அமைத்துள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளோம்.
இதனால் குளத்தில் போடப்பட்ட மண் முற்றாக அகற்றப்பட்டு குளத்தின் நீரேந்துப் பகுதி பழைய நிலைக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்பதையும், நீர்ப் பரப்புக்குப் பாதிப்பின்றிய முறையில் மிதக்கக்கூடிய பொறிமுறைகளால் பூங்காவை அமைக்கலாம் என்றும் எமது கோரிக்கைகளில் வெளிப்படுத்தியிருந்தோம்-என்றனர்.
போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் குளங்களை சாக்கடை ஆக்குவதா? அபிவிருத்தி செய்வதா?, அடுத்த தலைமுறைகளை குடிநீருக்கு கையேந்தவிடாதே!, குளம் காப்போம்; குலம்காப்போம் மற்றும் வலிந்துகாணாமல் ஆக்கப்படும் குளமாக வவுனியாக் குளமா? குதூகலமா? போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை இதன் போது மக்கள் ஏந்திப் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் மாவட்டத்தைச் சேர்ந்த பொது அமைப்பினர், இளைஞர்கள், சமூகஆர்வலர்கள், அரசியல்தரப்புகள், குளத்துக்கான மக்கள் செயலணியினர் மற்றும் பெண்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ந-110)

## காவடிகளை வாடகைக்கு வழங்குவோர் பாதிப்பு

சாவகச்சேரி மார்ச் 27

கோவில் உற்சவங்களில் காவடி எடுக்க சுகாதாரப் பகுதியினர் தடை விதித்துள்ளதால் எமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என்று காவடிகளை வாடகைக்கு வழங்குவோர் கவலை தெரிவித்துள்ளனர்.
இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;
கோவில்களில் திருவிழாக்கள் இடம்பெறும் போது, பக்தர்கள் தங்களுடைய நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவது வழமை. காவடிகள் எடுப்பதாக இருந்தால் அவர்களுக்கு நாங்கள் காவடிகளை வாடகைக்கு வழங்குவோம். இதனால் எமது வாழ்வாதாரத்தை முன்னெடுத்துச் செல்ல முடியும். எனினும் கொரோனாத் தொற்றுக் காரணமாக, திருவிழாக்கள் மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களுடன் இடம்பெறுகின்றன. கோவில்களில் காவடிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் தற்போது எமது வருமானம் பாதிக்கப்பட்டு. நாம் வாழ்வாதாரத்தை இழந்துள்ளோம் என்றனர்.
இது தொடர்பாக சுகாதாரப் பிரிவினருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது மாகாண சுகாதாரத் திணைக்களத்தால் கோவில் உற்வங்களில் காவடி பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனை நடைமுறைப்படுத்த வேண்டியது எமது கடமையாகும். இதனை மீறி அனுமதி வழங்கி அங்கு கொரோனாத் தொற்று உருவானால் திணைக்களத்துக்கு எம்மால் பதில் கூற முடியாது. இதனால் பாதிக்கப்படும் காவடிகளை வாடகைக்கு வழங்குவோர் மற்றும் நாதஸ்வரக் கலைஞர்கள் தமது நிலைப்பாட்டை சுகாதாரத் திணைக்களம் அல்லது மாகாண ஆளுநருக்கு முறையிட்டு தீர்வு காணலாம் என்றனர். (ப-9)

## முகக்கவசம் இன்றி இருந்தவரை அழைத்துச் சென்ற பொலிஸார்

சாவகச்சேரி,மார்ச் 27

கொடிகாமத்தில் உணவு கையாளும் நிலையத்தில் முககவசமின்றி உணவு தயாரிப்பில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நபரொருவர் பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டார்.
பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து அங்கு சென்ற பொலிஸார், சமையலாளி முகக்கவசம் அணியாமல் சமையலில் ஈடுபட்டதைக் கண்டு அவரை அழைத்துச்சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## சிறிதரன் எம்.பியின் மகனை இலக்கு வைத்து தாக்குதல்

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் மூத்த மகனை இலக்கு வைத்து, யாழப்பாணத்தைச் சேர்ந்த சேர்ந்த இளைஞர் குழு ஒன்று நேற்று தாக்குதல் சம்பத்தில் ஈடுட்டுள்ளது. யாழ்ப்பாணம், இந்துக் கல்லூரி வீதியில் உள்ள சிறிதரனின் வீட்டுக்கு முன்னால் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த சிறிதரனின் மகனைப் பின்தொடர்ந்த அந்தக் குழுவினர், சிறிதரனின் வீடு வரை சென்று தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். சம்பத்தை அறித்த சிறிதரனின் மகன், மோட்டார் சைக்கிளை வீதியில் போட்டுவிட்டு வீட்டுக்குள் தப்பித்த போதும், அவருடைய மோட்டார் சைக்கிளை அந்தக் குழுவினர் சேதமாக்கியுள்ளனர். இரும்பு கம்பி, மற்றும் தலைக்கவசங்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ப)

## மன்னாரில் வாகன உதிரிப்பாகங்களின் தரப் பரிசோதனை ஆரம்பம்!

மன்னார், மார்ச் 27

மன்னாரில் வாகன உதிரிப் பாகங்களின் தரம் பரிசோதிக்கப்பட்டு வழக்குப் பதிவு செய்யும் செயற்பாடுகள் நேற்றுக் காலை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
வாகன உதிரிப் பாகங்களின் தரம் பரிசோதிக்கும் திடீர் சுற்றிவளைப்பு ஒன்றை மன்னார் போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டிருந்தனர். மன்னார் நீதிமன்றத்துக்கு முன்பாக மன்னார் நகருக்குள் உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் அனைத்து வாகனங்களும் பரிசோதிக்கப்பட்டு வருகின்றன.
குறிப்பாக கனரக வாகனங்கள், இலகுரக வாகனங்கள் மற்றும் முச்சக்கர வண்டிகள் போன்றவற்றின் ரயர்களின் தேய்மானம், பிரேக் வகைகள் மற்றும் சமிக்ஞை விளக்குகள் உட்பட அனைத்து உதிரிப் பாகங்களின் இயங்குநிலையும் பரிசோதிக்கப்பட்டு வருகின்றன.
மேலும், வாகனங்களில் கவர்ச்சிக்காக பொருத்தப்பட்டிருக்கும் மேலதிக உதிரிப்பாகங்களை அகற்றுமாறும் போக்குவரத்துப் பொலிஸாரால் உத்தரவு வழங்கப்பட்டது.
இதன்போது திருத்தப்பட வேண்டிய அல்லது மாற்றப்பட வேண்டிய உதிரிபாகங்களை அடையாளம் கண்டு அவை 5 நாள்களுக்குள் சரி செய்யப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.
இதன்போது சில வாகனச் சாரதிகளுக்கு எதிராக நீதிமன்ற வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது. (ந-213)



# அம்பாறை மல்வத்தையை மையப்படுத்தி தனிப்பிரதேச சபை உருவாக்கப்பட வேண்டும்

### ஜனநாயக இளைஞர் அமைப்பு தீர்மானம்

அம்பாறை மாவட்டம், மல்வத்தையை மையப்படுத்தி தனிப்பிரதேச சபை உருவாக்கப்பட வேண்டும் என ஜனநாயக இளைஞர் அமைப்பால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
அமைப்பின் தலைமைத்துவ சபையின் இரண்டாவது அமர்வு முல்லைத்தீவு மூங்கிலாறு உடையார்கட்டிலுள்ள அமைப்பின் அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற போதே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
1968 முதல் 1987 வரை மல்வத்தை கிராம சபையாக இயங்கி வந்த மல்வத்தை பிரதேசம் 1987 முதல் சம்மாந்துறை பிரதேச சபையினுள் உள்ளீர்க்கப்பட்டது.
2009ஆம் ஆண்டு புதிய பிரதேச சபைகளை உருவாக்குதல் சம்மந்தமாக கோரப்பட்ட முன்மொழிவுகளுக்கு அமைவாக தனியான பிரதேச சபை ஒன்றை அப் பகுதி மக்கள் கோரினர். அந்தக் கோரிக்கை கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டு பின்னர் மழுங்கடிக்கப்பட்டது. 2017ம் ஆண்டு கூட இது தொடர்பான முன்மொழிவுகள் புதிய பிரதேச சபைகளை உருவாக்கும் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டன. எனவே உரிய தரப்பினர் இது தொடர்பில் கவனம் செலுத்தி மக்களின் நீண்டகால கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என ஜனநாயக இளைஞர் அமைப்பு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. (வ-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்மனைட் விற்பனையில் மாபெரும் மோசடி அம்பலம்

### மேலதிக விசாரணை நடத்த கோப்குழு பரிந்துரை

கொழும்பு, மார்ச் 27

லங்கா மினரல் சான்ட்ஸ் லிமிடட் நிறுவனத்தால் 85 ஆயிரம் மெற்றிக்தொன் இல்மனைட் விற்பனை செய்யப்பட்டமை குறித்து உடனடி விசாரணையை நடத்தி அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு அரசு பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் தலைவர் (கோப் குழு) பேராசிரியர் சரித ஹேரத், கைத்தொழில் அமைச்சின் செயலர் அனுஷ பல்பிட்டவுக்குத் தெரிவித்தார். கடந்த 23ஆம் திகதி இடம்பெற்ற கோப் குழுக் கூட்டத்தில் இந்த விடயம் ஆராயப்பட்டுள்ளது. ஒரு தொன் இல்மனைட்டுக்கு 165 அமெரிக்க டொலர் விலை மனுவை முன்வைத்த ஒப்பந்தகாரருக்கு வழங்காமல் விலை மனுக் கோரலுக்கான பட்டியலில் மூன்றாவது இடத்திலிருந்த 147 அமெரிக்க டொலரை வழங்க முன்வந்த ஒப்பந்தகாரர் ஒருவருக்கு விற்கப்பட்டுள்ளது.

அமைச்சரவையால் அமைக்கப்பட்ட உபகுழுவாலேயே ஒப்பந்தம் வழங்கப்பட்டதாகவும், இதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்ததாகவும் லங்கா மினரல் சான்ட்ஸ் நிறுவனத்தின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனினும், லங்கா மினரல் சான்ட்ஸ் நிறுவனத்தின் அதிகாரிகள் அமைச்சரவையையும் பிழையாக வழிநடத்தியிருப்பதாக கோப் குழுவின் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர். தற்பொழுது ஒரு தொன் இல்மனைட் 240 அமெரிக்க டொலருக்கு விற்பனை செய்யப்படுவதாக இங்கு தெரிவிக்கப்பட்டது. 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட இல்மனைட் விற்பனையுடன் ஒப்பிடுகையில் 2020ஆம் ஆண்டு விற்பனை குறைந்திருப்பது குறித்தும் இந்தக் குழு கவனம் செலுத்தியது. 2020ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் விலைமனு கோரிய ஒருவருக்கு விற்பனை செய்யப்பட்ட 85 ஆயிரம் மெற்றிக்தொன் இல்மனைட் புல்மோட்டையில் தொடர்ந்தும் களஞ்சியப்படுத்தப்பட்டிருப்பதால் லங்கா மினரல் சான்ட்ஸ் லிமிடட் நிறுவனத்துக்கு இழப்பு ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கொவிட் சூழல் காரணமாக குறித்த இல்மனைட்டை அகற்றுவதற்கு வழங்கப்பட்ட காலக்கெடு மேலும் நீடிக்கப்பட்டிருப்பதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். அதேநேரம், 65 ஆயிரம் மெற்றிக் தொன்களுக்கான கொடுப்பனவு மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் 20 ஆயிரம் மெற்றிக் தொன்களுக்கான கொடுப்பனவு இன்னமும் வழங்கப்படவில்லையென்றும் இங்கு புலப்பட்டது.

இது தொடர்பில் விசாரணை நடத்தி ஒரு மாத காலத்துக்குள் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு கோப் குழுவின் தலைவர், கைத்தொழில் அமைச்சின் செயலர் அனுஷ பல்பிட்டவுக்குத் தெரிவித்தார். அத்துடன் அறவிடப்படவேண்டியுள்ள நிலுவைத் தொகையை விரைவில் அறவிடுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுப்பதுடன், எதிர்காலத்தில் இவ்வாறான ஒப்பந்தங்களை வழங்கும்போது பொறுப்புடன் செயற்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் அவர் வலியுறுத்தினார். (ஒ.இ)

# ஒப்பந்த ஊழியர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை



கொழும்பு, மார்ச் 27

**இலங்கை போக்குவரத்து சபையில் ஒப்பந்த அடிப்படையில், 5 வருடங்களுக்கு அதிகமான காலம் சேவையாற்றி அனுபவமுள்ள அனைத்து ஊழியர்களையும் நிரந்தரமாக்க நடவடிக்கை எடுப்பதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் கடந்த 23ஆம் திகதி இடம்பெற்ற போக்குவரத்து அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கூட்டத் தில் அவர் இதனை குறிப்பிட்டார். இதே வேளை, நீண்டகாலமாக நிலவிவரும் சாரதி ஆலோசகர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு எதிர்வரும் மே மாதத்தில் உரிய பரீட்சையை நடத்தி தகுதியானவர்களை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் இங்கு தெரிவித்தார். நாடு முழுவதும் காணப்படும் உப டிப்போக்களை பஸ் தரிப்பிடங்களாக மட்டும் பயன்படுத்துவதற்கும், அவை தொடர்பான நிர்வாக நடவடிக்கைகளை பிரதான டிப்போக்கள் ஊடாக மேற்கொள்வதற்கும் அதன் மூலம் நாடு முழுவதும் பஸ் போக்குவரத்தை முறைமைப்ப டுத்தவும் வினைத்திறனான சேவையாக மாற்றுவதற்கும் அமைச்சு நடவடிக்கை எடுத்துவருவதாக இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார். நகர்ப்புற வாக னங்களை கையாள்வது தொடர்பான முடிவுகளை எடுக்கும் உள்ளூராட்சி போக்குவரத்துக் குழுக் கூட்டங்களில் போக்குவரத்து அமைச்சை பிரதிநிதித்து வப்படுத்தும் ரத்அதிகாரி ஒருவரின் பங்குபற்றலின் முக்கி யத்துவத்தை நாடாளுமன்ற உறுப்பினர்கள் இங்கு சுட்டிக்காட்டினர். இதனால் நகர்ப்புற வாகனங்களை கையாள்வது தொடர்பான முக்கிய தீர்மானங்கள் எடுக்கும் போது போக்குவரத்து அமைச்சை பிரதானமாக கொண்டு அந்த தீர்மானங்களை எடுப்பதன் ஊடாக முறைகேடுகளைத் தவிர்க்க முடியும் என்பது உறுப்பினர்களின் கருத்தாக இருந்தது.

சாரதிகள் மற்றும் நடத்துனர்களின்வெற்றிடங்களுக்குகுறைந்த வருமான குடும்பங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் தகுதி வாய்ந்தவர்களை விரைவாக இணைத்துக்கொள்ள இருப்பதாகவும் இராஜாங்க அம்மைச்சர் தெரிவித்தார். (ஒ.இ)

# விரும்பும் மொழிகளில் நாடாளுமன்ற அறிக்கை



கொழும்பு,மார்ச் 27

நாடாளுமன்ற அறிக்கைகளை, உறுப்பினர்கள் விரும்பும் மொழிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப அச்சிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார். நேற்று முன்தினம் இடம்பெற்ற அமர்வில், சபாநாயகர் அறிவிப்பு வேளையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகளை மூன்று மொழிகளிலும் அச்சிட்டு வழங்க பெருமளவு நிதி செலவு செய்யப்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த வேண்டும். எனவே சபை உறுப்பினர்கள் விரும்பும் மொழிகளில் அறிக்கைகள் வழங்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கு உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்தனர். இறுவெட்டுகளில் தகவல்களை வழங்கும் செயற்பாடும் நிறுத்தப்படுமாயின் அதுவும் நல்லதொரு திட்டமாக அமையும். முடிந்த அளவு இணைய வழிமுறை மூலமாக பெற்றுக் கொள்ளும் வேலைத்திட்டத்தை முதன்மைப்படுத்தலாம் என்றும் உறுப்பினர்கள் தெரிவித்தனர். (க-22)

# உள்ளகப் பொறிமுறைக்கு ஒத்துழைப்பு வழங்குவோம்

### எதிர்க்கட்சித் தலைவர் அறிவிப்பு

கொழும்பு,மார்ச் 27

சர்வதேசத்தின் நம்பிக்கையை வெல்லும் வகையில் உள்ளகப் பொறிமுறை அமைய வேண்டும். அவ்வாறானதொரு பொறிமுறை வெற்றியளிப்பதற்கு முழு ஒத்துழைப்பும் வழங்கப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இரண்டாவது நாளாக நடைபெற்ற விவாதத்தடில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித் ததாவது,

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நடுநிலை வகித்த நாடுகளின் ஆதரவும் தமக்குதான் என்று வெளிவிவகார அமைச்சர் கணக்கு காண்பிக்கின்றார். அப்படியானால் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது 27 லட்சம் பேர் வாக்களிக்கவில்லை. தினேஷ் குணவர்தனவின் கணக்குசூத்திரத்தின் பிரகாரம் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் எனக்கே வெற்றி. அதுமட்டுமல்ல இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்த 11 நாடுகளின் சனத்தொகை அடிப்படையில் பார்த்தாலும் இலங்கைக்கே வெற்றி என மற்றுமொருவர் மடத்தனமாகக் கருத்து வெளியிடுகின்றார். ஐ.நா. மனிதஉரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில் இரண்டு அல்லது 3 பக்கங்களிலேயே வடக்கு, கிழக்குப் பிரச்சினைகள் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளன . ஏனைய பக்கங்களில் நடப்பு அரசின் நடவடிக்கைகள் பற்றியே சுட்டிக்காட்டப்பட்டுளளன.



அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் தற்போதுள்ளவாறு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். ஒற்றையாட்சி பிளவுபடாத நாட்டுக்குள் அனைத்து இன மக்களும் ஐக்கியமாக வாழவேண்டும். வடக்கு, கிழக்கு மக்கள் முன்வைக்கும் கோரிக்கைகள் தொடர்பில் அரசு செவிமடுக்க வேண்டும். அதேவேளை, நல்லிணக்க ஆணைக்கு மற்றும் பரணகம ஆணைக்குழு ஆகியவற்றின் அறிக்கையிலுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு, அரசு நடைவடிக்கை எடுத்திருந்தால் உள்நாட்டுப் பிரச்சினை சர்வதேசம் சென்றிருக்காது. உள்நாட்டு பிரச்சினை சர்வதேச மயப்படுத்தப்படுவதை நாம் விரும்பவில்லை. வெளிநாட்டு நீதிபதிகளையும் எதிர்க்கின்றோம். அந்திய தலையீடுகளும் அவசியமில்லை. அரசின் பலவீனம் காரணமாகவே சர்வதேசம் தலையிடுகின்றது. தேசிய நல்லிணக்க பொறிமுறையை நோக்கி பயணிக்கலாம். அதற்கு ஆதரவு வழங்க நாம் தயார். சர்வதேசத்தின் நம்பிக்கையை வெல்லும் வகை யில் உள்ளக பொறிமுறை இருக்க வேண்டும். எமது நாட்டுப் பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்ளலாம். வெளிநாட்டு தலையீடுகள் அவசியமில்லை. நாட்டின் பக்கமே நாம் நிற்போம். எமக்கு தேசத்துரோகி முத்திரை குத்தமுடி யாது. அரசின் செயற்பாடுகளே ஜெனிவா தீர்மானம் வெற்றிக்குக் காரணம். உள்ளக பொறிமுறை ஊடாக நீதி நிலை நாட்டப்பட வேண்டும். மனித உரிமைகள் உறுதிப்படுத்தப்படவேண்டும்." - என்றார். (க-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை தொலைநோக்குச் சிந்தனையே...!

எதிர்பார்த்தது போன்று ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை அரசு முற்றிலும் நிராக ரிப்பதாக அறிவித்துள்ளது. இந்த நிலையில் அது தொடர்பான வாதப்பிரதிவாதங்களும், சர்ச்சைகளும், தீர்மான நிறை வேற்றத்தின் எதிரொலியாகச் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் நிகழப் போகும் சம்பவங்களும் முக்கியத்துவம் மிக்கவையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

எனினும் இவையனைத்தும் தீர்மானத்தை கொண்டு வந்து அதனை வெற்றிகரமாக நிறைவேற்றிய நாடுகளுக்கும் அதனை எதிர்த்த நாடுகளுக்குமிடையே இலங்கை மீதான அவர்களது அபிலாஷைகள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் குறித்த வகையில் மேற்கொள்ளப் போகும் ராஜரீக ரீதியிலான யுத்தமாக மட்டுமே இருக்கும் என்பதே உண்மை.

நாம் ஏற்கனவே இப்பகுதியில் கூறியது போன்று, தமிழ் மக்களின் பிரச்சினை ஜெனிவாவில் பேசுபொருளாக்கப்பட்டு, விவாதிக்கப்பட்டு அதனடிப்படையில் அமைந்த ஆதாரங்களை முன்வைத்து இலங்கை மீதான தீர்மானத்துக்கான முடிவு எட்டப்பட்டனவேயன்றி அம்மக்களின் நியாயம் கோரலுக்கான நீதியை ஏற்படுத்த எந்தத் தீர்க்கமான செயற்பாட்டுப் பொறிமுறை எதனையும் மேற்கொள்ள இலங்கையை வலியுறுத்தவில்லை என்பதே உண்மை.

ஆயினும் இலங்கை அரசு அதனை முற்றாக நிராகரித்தமையானது, அதன் இராஜதந்திர நீதியிலான பலமா அல்லது பலவீனமா என்பதே இப்போதைய கேள்வி.

தீர்மான வாக்கெடுப்பில் இலங்கைக்கு ஆதரவாகச் செயற்பட்ட நாடுகளில் பொரும்பாலானவை, தமிழ் மக்களுக்கு எதிரான இனஅழிப்பை நேரடியாகவும் மறைமுகமாகவும் இலங்கைக்குப் பன்முகப்பட்ட ஆதரவை வழங்கி நடைபெற்ற போரின் முடிவுரைக்குப் பக்கபலமாக துணை நின்றவை என்பது வெளிப்படையான விடயம்.

ஆக அந்தப் போரை உத்வேகப்படுத்தி பேரழிவை ஏற்படுத்திய நாடுகளுக்கும் ஜெனிவா தீர்மான குற்றச்சாட்டுக்கும் துணை காரணப் பங்காளர் என்ற உரித்து இருக்கவே செய்கிறது. அவர்கள் தீர்மானத்துக்கு ஆதரவாகச் செயற்பட்டிருப்பின் தமது வரலாற்றுத் தவறை உணர்ந்து செயற்பட்டவர்களாக அடையாளப்படுத்தப்பட்டிருப்பர்.

ஆனால் அப்படி அவர்கள் செயற்படவில்லை. அதேசமயம் நடுநிலையைப் பேணியவர்களின் மனசாட்சியும் சந்தேகத்துக்கு இடமானதே. சொந்த அரசியல் அபிலாஷைகள் அவர்களின் நீதிக்கான குரலைக் கட்டிப் போட்டிருக்கலாம். சுயநலமிகளின் ஆதரவு என்பது பலமானதல்ல. அவ்வளவுதான்.


தீர்மானத்தை இலங்கை நிராகரித்துவிட்டதாக வெளிப்படையாக அறிவித்த வகையில் உலகுக்கு அது என்ன செய்தியைச் சொல்லியிருக்கிறது என்பது சர்வதேச சமூகம் புரிந்து கொள்ள வேண்டிய விடயம்.

ஆனால் இத் தீர்மானம் தமிழ் மக்களுக்கு ஓங்கி ஒரு செய்தியைச் சொல்லியே உள்ளது. தேசிய ரீதியிலோ சர்வதேச ரீதியிலோ நீங்கள் மேற்கொள்ள முனையும் எத்தகைய போராட்ட நகர்வுகளையும் நாம் கண்டுகொள்ளமாட்டோம். இவையனைத்தையும் தேசத்துக்கு எதிரான நடவடிக்கைகளாகவே நாம் எடுத்துக் கொள்வோம் என்பதே அதுவாகும்.

இந்த நிலையில் இந்தத் தீர்மானமானது ஏமாற்றம் அளித்தாலும் ஆனால் தமிழருக்கு பலனளிக்கும் என மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளமைதான் வியப்பாக இருக்கிறது. ஏற்கனவே இதேபோன்ற கருத்தையே சம்பந்தனும் சுமந்திரனும் கூட தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட முழுமையாகத் தாம் ஒத்துழைப்பு வழங்கப் போவதாகவும் அறிக்கை விட்டுள்ளார்கள்.

போர்க் குற்றங்களையும் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளையும் பகிரங்கமாகவே மேற்கொண்டுவிட்டு போர்க் குற்றங்கள் நடக்கவில்லை என அப்பட்டமாகப் பிரகடனம் செய்து கொண்டிருக்கும் இலங்கை அரசு தான் செய்த குற்றங்களை தானே விசாரிக்கக் கோரும் பொறிமுறையை முன்வைக்கும் இயற்கை நீதிக்கு முரணான ஐ.நா. பிரேரணையை வரவேற்கிறதா? அதற்கு முழு ஆதரவை வழங்கப் போகிறதா? என்ற சாமானியத் தமிழ் மகனின் கேள்வி நியாயமானதல்லவா?

மீண்டும் இலங்கை அரசை மறைமுகமாகப் பாதுகாக்கும் இந்திய நடுநிலை தன்மை போன்ற 'முண்டு கொடுத்தல்' செயற்பாடுகளை முன்னெடுக்க இவர்கள் முயல்கிறார்களா? மக்களின்உரிமைகளைவெ'றெடுக்கும்அரசியலைமுன்னெடுக்கும் மார்க்கமும் மூலோபாயமும் இதுவல்ல என்பதைச் சொல்லி வைப்பது எமது காலக்கடமையாகும்.




# ஐ.நா. மனித உரிமைகள் பேரவை இலங்கையைக் காப்பாற்றியுள்ளது!

*காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவிப்பு*

**கொழும்பு, மார்ச் 27**

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை இன அழிப்புக்கான சர்வதேச விசாரணை மற்றும் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல் போன்ற ஈழத்தமிழர் முன்வைத்த பிரதான கோரிக்கைகளை நீக்கம் செய்து இலங்கையை காப்பாற்றியுள்ளது என்று வடக்கு கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.**

அந்த அமைப்பால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

'இலங்கையின் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பான இந்தப் பிரேரணை, பிரித்தானியா தலைமையில் சமர்ப்பிக்கப்பட்டது. உண்மையில் பொறுப்புக் கூறலை இலங்கை அரசிடமே கொடுக்கின்ற ஓர் வலுவற்ற தீர்மானமே இது. 13ஆம் திருத்தச் சட்டமே தமிழருக்கு நிரந்தர அரசியல் தீர்வுக்கான ஒரே வழியென இந்தியா பல ஆண்டுகளாக கூறிவந்தது. தற்போது பிரித்தானியா தலைமையில் உறுப்பு நாடுகளினால் தயாரிக்கப்பட்ட தீர்மானத்துக்குள் அதைப் புகுத்திவிட்டு வாக்களிப்பில் பங்கேற்காமல் வெளிநடப்புச் செய்திருக்கிறது.

இன்றைய கால கட்டத்தில் சர்வதேச அரங்கில் இலங்கைக்கு ஏற்பட்ட தோல்வியாக இது இருந்தாலும், முன்னைய தீர்மானங்களை விட வலுவற்று வெறுமனே நீர்த்துப்போன ஓர் தீர்மானமாக இது அமைந்துள்ளமை வெளிப்படையானதே.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் 4 முன்னாள் ஆணையாளர்களும், இலங்கைக்குச் சென்றுவந்த 13 முன்னாள் ஐ.நா சிறப்பு அறிக்கையாளர்களும், இலங்கை தொடர்பான ஐ.நா பொதுச் செயலரின் வல்லுநர் குழுவில் இடம்பெற்ற 3 உறுப்பினர்களும் இலங்கையை அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தின் பார்வைக்கு அனுப்பக்கோரியிருந்தார்கள். பாதிக்கப்பட்ட தமிழ்ச் சமூகமும் கடந்த பல ஆண்டுகளாக இதைத்தான் கோரி வருகிறது. மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு இருக்கின்ற ஈழத் தமிழர்கள், அதிலிருந்து மீழ்வது தொடர்பில், ஆக்கபூர்வமான ஒருங்கிணைந்த செயற்பாடுகளை சர்வதேசம் முன்னெடுக்கவில்லை - என்றுள்ளது. (ம)

# தமிழனத்தையே மறந்தார் கோத்தா

*சபையில் சிறிதரன் எடுத்துரைப்பு*

கொழும்பு,மார்ச் 27

நாட்டின் தற்போதைய ஜனாதிபதி பதவியேற்ற பின்னர், அவர் உரையாற்றிய எந்தவொரு நிகழ்விலும், நாட்டில் தமிழினம் என்ற ஒரு இனம் இருப்பதாகவோ அவர்களுக்கு பிரச்சினைகள் இருப்பதாகவோ கூறியதுமில்லை; ஏற்றுக்கொண்டதுமில்லை. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் இடம்பெற்ற இன அழிப்பு உண்மைகளை தேசிய ரீதியில் கண்டறிய முடியாது. எனவே, இந்த விடயத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்குக் கொண்டு செல்ல வேண்டும்.

ஐ.நா. தீர்மானம் தொடர்பில் இந்தியா நடுநிலைமை வகித்திருந்தாலும் இந்தியா இம்முறை தனித்துவமான செய்தியை இலங்கைக்குச் சொல்லியுள்ளது. உலகம் வெட்கித்தலைகுனியக்கூடிய அளவுக்கு இலங்கையில் பெரும் இன அழிப்பு நடைபெற்றது. எனவே, இந்த விடயத்தில் சர்வதேசம் தீவிரமாக ஈடுபட வேண்டும். சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்குக் கொண்டு செல்லப்பட வேண்டும். அங்கு இது விசாரிக்கப்பட வேண்டும். தமிழர்களின் அபிலாஷை அதுதான்.

இராணுவமும் அரசும் தமிழ் மக்கள் மீது கொலைகளையும், குற்றங்களையும் புரியவில்லை என்றால், அநீதிகளை இழைக்கவில்லை என்றால் ஏன் பயப்பட வேண்டும்? விசாரணைக்கு முகம் கொடுக்கலாம் தானே?.

உங்கள் மடியில் கனதி இருப்பதனால் தான் இதற்கு எதிராக நீங்கள் குரல் கொடுக்கின்றீர்கள். நீங்கள் போர்க்குற்றம் செய்யவில்லை என்றால் ஒரு பகிரங்க விசாரணைக்குத் தயாராகுங்கள். இந்த நாடு ஒரு இனவாத சகதிக்குள் மூழ்கிப் போயுள்ளது. அமைச்சர்கள் இனவாதத்தைக் கக்குகின்றார்கள். இந்த நாடு இனவாதத்தால் அழியப்போகின்றது. எனவே, சர்வதேச விசாரணை வேண்டும் என்பதையும் எமக்குத் தீர்வு கிடைக்க வேண்டும் என்பதையுமே நாம் வலியுறுத்துகின்றோம் ,என்றார். (க-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*முல்லைத்தீவு மாந்தை கிழக்கில்*

# மேய்ச்சல் தரவைக்கான நிலம் இனங்காணப்பட வேண்டும்

சபை உறுப்பினர் தெரிவிப்பு


**முல்லைத்தீவு, மார்ச் 27**

**முல்லைத்தீவு மாந்தை கிழக்கில் மேய்ச்சல் தரவைகள் இல்லாததன் காரணமாக கால்நடை வளர்ப்பாளர்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். எனவே மேய்ச்சல் தரவைகள் இனங்காணப்படவேண்டும் என்று மாந்தை கிழக்குப் பிரதேச சபை உறுப்பினர் வை.ஜெயரூபன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது, மாந்தை கிழக்கிலுள்ள வவுனிக்குளம் உட்பட பல குளங்களில் இருபோக நெற்செய்கை மேற்கொள்வது வழக்கம். 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட கால்நடைகள் மாந்தை கிழக்கில் உள்ளன.


இந்தக் கால்நடைகளைப் பயிர்ச் செய்கைக் காலங்களில் மேய்ச்சலில் ஈடுபடுத்துவதில் தொடர்ச்சியாக கால்நடை வளர்ப்பாளர்கள் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

மாந்தை கிழக்குப் பிரதேச செயலகத்தில் நடைபெறுகின்ற கூட்டங்களில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவை நிலங்களை இனங்காட்டுங்கள் என தொடர்ச்சியாக விடுக்கப்பட்டு வரும் கோரிக்கைகளுக்கு தீர்வுகள் கிடைக்கவில்லை.



கால்நடை வளர்ப்பாளர்களும் பயிர்ச் செய்கையாளர்களும் இரு தொழில்களையும் செய்கின்ற போதிலும் மேய்ச்சல் தரவையின்மை காரணமாக அடிக்கடி முரண்பாடுகள் நிகழ்கின்றன. மாந்தை கிழக்குக்கான மேய்ச்சல் தரவை நிலங்களை மாந்தை கிழக்குப் பிரதேச செயலகம் இனங்கண்டு கால்நடை வளர்ப்பாளர்களுக்கு அதை அடையாளம் காட்ட வேண்டும். அதன்போது தான் கால்நடை வளர்ப்பை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும்-என்றார்.

(ற-13)



## சமூக மட்டத் தலைவர்களுக்கு கிளிநொச்சியில் ஒன்று கூடல்!


கிளிநொச்சி, மார்ச் 27

வடக்கு மாகாண சமூக மட்டத் தலைவர்களுக்கான விசேட ஒன்று கூடல் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது பெண் தலைமைத்துவம் சமூகத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும், இன்றைய சமகாலத்தில் தலைமைத்துவம் வகிக்கும் பிரதிநிதிகள் எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள் உள்ளடங்கலான சமூகப் பிரிவினர்களின் பல்வேறு வகையான சவால்கள் எனப் பல்வேறு விடையங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலின் நிறைவில் மாவட்ட இணைப்பாளர்களாக முல்லைத்தீவு மாவட்டத்துக்கு பிரதேச சபை உறுப்பினர் ஆறுமுகம் ஜோன்சன், யாழ்ப்பாண மாவட்டத்துக்கு யாழ். மாநகர சபை உறுப்பினர் எம்.பாலச்சந்திரன், வவுனியா மாவட்டத்துக்கு நகர சபை உறுப்பினர் ஜே.சலிஸ்ரன், கிளிநொச்சி மாவட்டத்துக்கு பிரதேச சபை உறுப்பினர் த.ரமேஸ் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (ற-13)



## மக்கள் பாவனையின்றி சுனாமி நினைவாலய பூங்கா!

முல்லைத்தீவு, மார்ச் 27

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு நகருக்கு அண்மையில் அமைக்கப்பட்டுள்ள சுனாமி நினைவாலய சிறுவர் பூங்கா பாவனை செய்ய முடியாத நிலையில் காணப்படுகின்றது என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

முன்னர் வன்னிக்குரோஸ் என்ற அமைப்பின் ஆளுமையின் கீழிருந்த இந்த சிறுவர் பூங்கா, பின்னர் பிரதேச சபையின் ஆளுகையின் கீழ் வந்துள்ளது.

இந்த நிலையில் சிறுவர் பூங்காவில் சிறுவர்கள் விளையாட முடியாத நிலை காணப்படுகின்றது.

சிறுவர் பூங்காவுடன் காணப்படும் பொதுநோக்கு மண்டபமும் அநாதரவான நிலையில் காணப்படுகின்றது. சிறுவர் பூங்கா பொதுநோக்கு மண்டபத்துக்கு வழங்கப்பட்ட மின்சார இணைப்புக்கள் மற்றும் குழாய்க் கிணற்றுக்கான தண்ணீர் மோட்டர் என்பன திருடர்களால் கொள்ளையிடப்பட்டுள்ளன.

தண்ணீர் மோட்டர் அண்மையில் களவாடப்பட்ட நிலையில், பொது மண்டபத்தின் கட்டடத்திலுள்ள மின்சாலை ஆழிகள் மற்றும் பெறுமதியான மின் விசிறிகள், வயர்கள் என்பன கொள்ளையர்களால் கொள்ளையிடப்பட்டுள்ளன.

மண்டபத்தில் மாட்டுச் சாணியுடன் காணப்படுகின்ற நிலையில், சிறுவர் பூங்காவை பிரதேச சபையினர் சுத்தம் செய்து அதை பூங்காவாக மாற்றியமைக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-9)

*மூங்கிலாற்றில்*

## சட்டவிரோத மின்பாவனையை கட்டுப்படுத்தக் கோரிக்கை!

முல்லைத்தீவு, மார்ச் 27

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்குட்பட்ட மூங்கிலாற்று கிராமத்தில் அனுமதியற்ற முறையில் ஒருசிலர் வீடுகளில் கனரக மோட்டார்களைப் பயன்படுத்தி மரம் அறுத்தல், இரும்பு ஒட்டுதல் போன்ற வேலைகளில் ஈடுபட்டுவருவதால் பலரது வீடுகளில் உள்ள மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன என்று மக்கள் தெரிவித்தனர்.

இந்தக் கிராமத்தில் இரவு நேரங்களில் வீடுகளில் வைத்து ஒரு சிலர் இந்த வேலைகளில் ஈடுபட்டு வருவதால் அவ்வப்போது மின்சாரம் கூடிக் குறைகின்றது.

இதனால் சிலரது வீடுகளிலுள்ள மின் விளக்குகள் செயலிழந்துள்ளது. இதுகுறித்து மின்சார சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

(ற-19)

## பெண் ஒருவரின் சைக்கிள் திருட்டு

சாவகச்சேரி, மார்ச் 27

சாவகச்சேரிப் பிரதேச செயலகத்தில் வாகன வரி செலுத்த வந்த பெண் ஒருவரின் சைக்கிள் இனந்தெரியாத ஒருவரால் நேற்றுமுன்தினம் திரு டப்பட்டுள்ளது.

சாவகச்சேரி சப்பச்சிமாவடிப் பிள்ளையார் கோவில் வீதியைச் சேர்ந்த நபரின் சைக்கிளே இவ்வாறு திருடப்பட்டுள்ளது.

அந்த நபர் சைக்கிளை பிரதேச செயலகத்துக்கு முன்பாக நிறுத்தி விட்டு உள்ளே சென்று திரும்பி வந்த போது சைக்கிள் திருடப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.(ற-9)

## போதையில் சாரத்தியம் மூவருக்குத் தண்டம்

சாவகச்சேரி, மார்ச் 27

ஆவணங்களின்றி மதுபோதையில் வாகனம் செலுத்திய மூவருக்கு சாவகச்சேரி நீதிமன்றால் தலா 77 ஆயிரத்து 500 ரூபா வீதம், 2 லட்சத்து 32 ஆயிரத்து 500 ரூபா தண்டம் நேற்று விதிக்க ப்பட்டது.

பொலிஸாரால் மதுபோதையில் சாரதிய அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம், [illegible] வரிப் பத்திரம் ஆகிய [illegible]யின்றி வாகனம் செலுத்தியதாக குற்றஞ்சாட்டி மூவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று தனித்தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

சாரதிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து மூவருக்கும் தலா 77 ஆயிரத்து 500 ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது. இதேவேளை அனுமதிப், பத்திரமின்றி வாகனத்தில் மணல் ஏற்றிவந்த சாரதி ஒருவருக்கு 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

(வ-9)

## விசேட பூசை வழிபாடுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 27

உலகில் வாழும் அனைத்து மக்களும் கொரோனாவைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீள்வதற்காக இறை ஆசி வேண்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் உரும்பிராய் ஓடயம்பதி அருள்மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளது.

வழிபாடுகளின் நிறைவில் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ தி.கிஸ்ணமூர்த்திக்குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயணமும் இடம்பெறவுள்ளது. (ய)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்பாடல் தெளிவு இல்லாமையே சமூக ஒற்றுமை சீர்குலையக் காரணம்


## மன்.மாவட்டச் செயலர் தெரிவிப்பு

**மன்னார், மார்ச் 27**

**தொடர்பாடல் பற்றிய தெளிவு இல்லாமையே எமது சமூக ஒற்றுமை சீர்குலைய பெரும் காரணியாக உள்ளது என்று மன்னார் மாவட்டச் செயலாளர திருமதி ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார்.**

தொடர்பாடல் பயிற்சி மையத்தால் மேற்கொள்ளப்பட்டு வந்த மூன்று மாத பயிற்சிகளை நிறைவு செய்த இளைஞர் யுவதிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மன்னார் ஆகாஷ் விடுதியில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு மேலும் தெரிவித்த அவர்;

அரச நிறுவனங்களிலும் சமூகங்களிலும் தொடர்பாடல் முறை என்பது மிகவும் அவசியமான ஒன்றாகக் காணப்படுகின்றது. இந்த தொடர்பாடல்கள் என்பது மக்களுக்குள் பிரச்சனைகளை ஏற்படுத்துவதாகவே காணப்படுகின்றது. தற்போது முக நூல்களில் பல்வேறு இன, மதப் பிரச்சினைகள் உருவாவதற்கு அடித்தளம் இடுவதாக உள்ளது. இவ்வாறு முரண்பாடான தொடர்பாடல்களை நினைக்கும் பொழுது மிகவும் கவலையாக உள்ளது. ஏனெனில் தொடர்பாடல் பற்றிய தெளிவு இல்லாமையே எமது சமூக ஒற்றுமை சீர்குலையப் பெரும் காரணியாக உள்ளது. ஆகவே இளைஞர் யுவதிகள், கற்றுக்கொண்ட தொடர்பாடல் பன்மைத்துவம், மதங்களைப் புரிந்துகொள்ளுதல் முரண்பாட்டைத் தவிர்த்தல், பால்நிலை போன்ற மிக முக்கியமான பயிற்சிகளை செயல்படுத்த வேண்டும். அவ்வாறு செய்வதிலேயே உங்களுடைய எதிர்கால வெற்றி தங்கியுள்ளது. பயிற்சிகளை நிறைவு செய்து சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வதோடு உங்களுடைய முயற்சி நின்றுவிடக் கூடாது நீங்கள் கற்றுக்கொண்டவற்றை ஏதோ ஒருவகையில் செயல்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும். உங்கள் கிராமங்களில் அல்லது உங்களுடைய அயல் கிராமங்களில் எங்கெல்லாம் தொடர்பாடல் சம்பந்தமான பிணக்குகள் காணப்படுகிறதோ அங்கெல்லாம் உங்களுடைய செயல்பாடுகளை நீங்கள் செய்ய வேண்டும் - என்றார். (ப- 213)




### தவறவிடப்பட்டுள்ளது

நாயன்மார்கட்டிற்கும், யாழ் பல்கலைக் கழகத்தின் CODL இடையில் வைத்தியத் தேவைக்காக எடுத்துச் செல்லப்பட்ட ஒருதொகைப் பணம் தவறவிடப் பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

**077 353 0567**

## மரண அறிவித்தல்

### பண்டிதர் திரு.தி.பொன்னம்பலவாணர் ஐயா



பொன்னாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னாலை சித்திவிநாயகர் ஆலய தர்மகர்த்தாவும் அர்ச்சகருமாகிய பண்டிதர் திரு.தி. பொன்னம்பலவாணர் ஐயா அவர்கள் நேற்று (26.03.2021) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் அமரர் பொன்னுத்துரை தியாகராஜா ஐயா, காமாட்சி தம்பதியரின் மூத்த மகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், கந்தர்மடத்தைச் சேர்ந்த அமரர்களான கனகசபாபதி அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், மங்கையர்க்கரசி, ஞானாம்பிகை, வடிவாம்பிகை அருண்மொழித்தேவர் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், கந்தையா, ஸ்யாமளா, காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, மங்கையர்க்கரசி மற்றும் பாலசுப்பிரமணியம், தில்லைராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், Dr.மயூரேசனின் சித்தப்பாவும், திவ்யா, சௌமியா, தனஜா, விதுஜா ஆகியோரின் பெரியப்பாவும், காலஞ்சென்ற ஞானபூரணி, கணேதீஸ்வரன், ஜெகதீஸ்வரன், காலஞ்சென்ற கேதீஸ்வரன், மாதங்கி, நர்த்தனன், வித்தகன், சுபாங்கி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2021) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பொன்னாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவிர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**



விசுவமடு தொட்டியடியைச் சேர்ந்த அமரர் பரஞ்சோதி பிரசாத்தின் 12 ஆம் ஆண்டு நினைவுதினத்தை முன்னிட்டு விசுவமடு தொட்டியடி கிராமத்தில் வயோதிபர்களுக்கான உலர் உணவுப்பொருள்கள் மற்றும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (ய-222)

## மரண அறிவித்தல்

### திரு.ஜோசப் அலோசியஸ் ஜெயராஜன்

பெரியவிளானைப் பிறப்பிடமாகவும், தும்பளை மேற்கு, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட ஜோசப் அலோசியஸ் ஜெயராஜன் அவர்கள் கடந்த (25.03.2021) கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோசப் ஞானம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா அழகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், நவமணி (ஓய்வு பெற்ற மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்) அவர்களின் பாசக் கணவரும், திலகா (கனடா), காலஞ்சென்றவர்களான ஜோர்ஜ் இமானுவேல், ஜேசுதாசன், சுகுணராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சேவியர் சின்னத்துரை மற்றும், நேமிநாதன், சகுந்தலாதேவி, பாலசிங்கம் (இந்தியா), அரியமலர் (கனடா), தவமணி, அருந்தவராஜா (ஓய்வு பெற்ற மேற்பார்வை பொதுச்சுகாதார பரிசோதகர்), ஸ்ரீஜெகநாதன் (கனடா), ஸ்ரீதரன் ஆகியோரின் மைத்து னரும், பாலசௌந்தரி, சுந்தரலிங்கம், யோகமலர், தனபாலசிங்கம், போதகர் ஜோன் (சுவிஷேச ஜெபவீடு, தும்பளை), உமாசிவதர்சினி, பவித்திரா (கனடா), புஸ்பமலர் ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரனும், பிரகாஸ், காயத்திரி (UK), அரவிந்தன் (கனடா), குகாசினி (கனடா), ஜனனி (கனடா) ஆகி யோரின் ஆசைச் சித்தப்பாவும், கஜேந்திரன் (UK), பிருந்தா (UK), மயூரி (UK), பிரசாந் (UK), டயானா (இந்தியா), காலேப், ஜான்சி ஆகியோரின் ஆசைமாமாவும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (27.03.2021) சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று நல்லடக்கம் காலை 10.00 மணியளவில் பருத்தித்துறை கோரியடி சேமக்காலையில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தும்பளை மேற்கு,**
**பருத்தித்துறை.**
**மனைவி: 077 886 2972**
**மைத்துனன்: 077 570 0532**

**தகவல்:**
**மனைவி மற்றும் குடும்பத்தினர்.**

# மதுவன் நிலையத்தின் ஆண்டு நிறைவு விழா



சாவகச்சேரி, மார்ச் 27

மீசாலை கிழக்கு மதுவன் சனசமூக நிலையத்தின் 30 ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்றுமுன்தினம் நிலைய முன்றலில் இடம்பெற்றது. நிலையத் தலைவர் வி.சிறிகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் சிவமங்கை இராமநாதன் கலந்து கொண்டார்.

இதன்போது, ஆண்டு விழாவையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களும் நிலையத்தில் கடந்த 29 வருடங்களாக தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகிய பதவிகளை வகித்து நிலையத்தை சிறப்பாக வழிநடத்திய விருந்தினர்களும் கௌரவிக்கப்பட்டனர். (ந-9)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நாட்டுக்கு மீள்திரும்புதல் நேற்றைய கதையின் தொடர்ச்சி

## அங்கம் 6

நீங்கள் வேலைவாய்ப்பிற்காக அல்லது நிரந்தரமாக வதிவதற்காக வேண்டி வெளிநாட்டுக்குச்செல்ல விரும்புகிறீர்களா. தயவுகூர்ந்து உங்களினதும் உங்களின் நெருங்கிய உறவுகளினதும் பாதுகாப்பை பற்றி முதலில் அக்கறை எடுத்துக்கொள்ளுங்கள். வெளிநாட்டுக்கு செல்ல விரும்பினால் எப்பொழுதும் பாதுகாப்பான பாதையை தெரிவு செய்யுங்கள். இந்த சித்திரக்கதையில் ராஜாவுக்கு என்ன நிகழ்கின்றது என்பதை தொடர்ந்து அவதானிக்கும் போது பாதுகாப்பான புலம்பெயர்வை பற்றிய உங்களின் பார்வைக்கோணத்தை அதிகரித்துக்கொள்ள முடியும். இப்பத்திரிகையில் 7 நாட்களுக்கு தொடராக பிரசுரிக்கப்படவிருக்கும் சித்திரக்கதையின் 6ஆவது அங்கம் இதுவாகும். ஒவ்வொரு அங்கத்தின் இறுதியிலும் பரிசுகளை பெறும் வாய்ப்புக்களும் வழங்கப்பட்டுள்ளது.

**மனித கடத்தல்காரர்கள் பற்றி விழிப்புடனிருங்கள்! பாதுகாப்பான வெளிநாடு செல்லும் பாதையை தெரிவு செய்வதற்கு IOM நிறுவனத்தின் நேரடி இலக்கம் 0774410086 இற்கு அழையுங்கள்.**



இதற்கிடையில் கொரோனா வைரஸ் துரிதமாக பரவுவதை ராஜா தெரிந்து கொள்கிறார்.



இடைத்தங்கல் நாட்டில் குடிவரவு சட்டங்களை மீறி ஒளிந்து தங்கியிருப்பதால் ராஜாவினால் உதவிகளை பெற்றுக் கொள்ளவோ




வைத்திய சாலையை அணுகி மருத்துவ உதவியை நாடவோ தயங்கினார்.



இவை போன்ற காரணங்களால் இலங்கைக்கு திரும்பி விட வேண்டும் என ராஜா வலுவாக உணர்ந்தார்.



அதே வேளை கொரோனா வைரசின் பரவலை கட்டுப்படுத்துவதற்காக வேண்டி புலம் பெயர்ந்தோர் இலங்கையினுள் படிப்படியாகவே பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்பட்டனர். இதன் காரணமாக மேலதிக காலங்கள் இடைத்தங்கல் நாட்டில் ராஜா தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

**வினா : மீள்திரும்புவதை திட்டமிடுவதற்கு ராஜாவுக்கு வழங்கக் கூடிய சிறந்த அறிவுரை என்ன?**



விடை 1: ஒளிந்திருக்கும் இடத்திலேயே தொடர்ந்தும் ஒளிந்திருக்க வேண்டும்.



விடை 2: தற்போது தங்கியிருக்கும் நாட்டிலுள்ள இலங்கை தூதரகத்தை உடனே தொடர்பு கொள்ள வேண்டும்.

மேலுள்ள கேள்விக்கு சரியான விடையை தெரிவு செய்வதன் மூலம் நாளாந்த பரிசுக்குலுக்களில் பரிசினை வெல்லுங்கள். உங்களின் விடையை அல்லது விடைகளை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களுடன் IOM நிறுவனத்தின் 0774410086 என்ற நேரடி இலக்கத்திற்கு அனுப்பி வையுங்கள்.
விடைகளை SMS அல்லது வட்சப் அல்லது வைபர் மூலமாக 0774410086 என்ற இலக்கத்திற்கு அனுப்ப முடியும். S6 என்ற குறியீட்டை தவறாமல் குறிப்பிடவும்.

S6 விடை எண்(கள்), பிரசுரமான திகதி, பத்திரிகையின் பெயர்
பால்: ஆண் / பெண், வயது, ஊர் - மாவட்டத்தின் பெயர்
உதாரணம்: S6 3,4 22.03.2021 - உதயன், ஆண் 20 சிலாபம் - புத்தளம் மாவட்டம்.

**விடைகள் 07.04.2021 திகதி வரை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.**

**பாதுகாப்பான மற்றும் முறையான புலம்பெயர்வு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இச்சித்திரக்கதை IOM நிறுவனத்தினால் பிரசுரிக்கப்பட்டுள்ளது.**

**புலம்பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனம் (IOM)**
9ஆம் மாடி, IBSL கட்டிடம்,
80A, எல்விடிகலை வீதி, பொறல்லை, கொழும்பு 8.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள்

**மேடம்:** சற்று வேகமாக நிகழ்ச்சிகள் நடந்தேறி பிரமிப்பூட்டும். நண்பர்கள் மத்தியில் உங்களின் புகழ் அதிகரிக்கும். முயற்சி கூடும். சிறிய அளவில் உடல் நலக் கோளாறுகள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** அலுவலக பணிகளில் அதிக அக்கறை காட்டுவீர்கள். கவர்ச்சி அம்சம் அதிகரிக்கும். நண்பர்களால் நன்மை ஏற்படும். உறவினரோடு முன்பு ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும்.

**மிதுனம்:**பயணங்கள் பலன் தருவதாக அமையும். களைப்பு வரும். எதிர்பாராத விரயங்கள் உருவாகும். சிலருக்கு உற்சாகம் கூடும். கணவன் மனைவிக்குள் மறுபடியும் பாசம் அதிகரிக்கும்.

**கடகம்:** பிள்ளைகளின் மூலம் நல்லதோர் செய்தி ஒன்று வந்து சேரும். உடல் நலம் குறித்து அக்கறை காட்டியாக வேண்டும். வேலை கிடைப்பதில் நீண்ட நாளாக உள்ள தடை நீங்கும்.

**சிம்மம்:**தடைகள் விலகி நல்ல வாய்ப்பு கிடைக்கும். மனம் மகிழும். பிள்ளைகள் வழியில் நன்மைகளும், மகிழ்ச்சியும் கட்டாயம் உண்டு. சற்று வசதிக்குறைவான இடத்தில் தங்க வேண்டி நேரலாம்..

**கன்னி:** புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்துப் போடுவீர்கள். யாருடன் பேசினாலும் கறாராகப் பேச வேண்டாம். சிகிச்சை பெறுபவர்கள் பூரண நலமடைந்து மகிழ்வர்.

**துலாம்:**அவசரமாக வெளியூர் பயணம் மேற்கொள்ள வேண்டிவரும். நீங்கள் எது செய்தாலும் அதனால் நற்பலன்கள் இருக்கும். உடல் உபாதைகள் நீங்கும். நல்ல வேலை அமையும்.

**விருச்சிகம்:** சோர்வு நீங்கி உற்சாகம் பிறக்கும். முயற்சியை அதிகரிப்பீர்கள். சிக்கனமாக இருக்க வேண்டுமென்று திட்டமிடுவீர்கள். விலை உயர்ந்த பொருள் வாங்குவீர்கள். பயணம் உண்டு.

**தனுசு:** செலவுகள் அதிகரிக்கும். விமர்சனங்களை ஏற்பது நல்லது. அதிர்ஷ்டமான நாள். வேலைகளை உடனுக்குடன் முடிப்பீர்கள். பெற்றோருடன் சிறு சிறு மன வருத்தங்கள் வந்து நீங்கும்.

**மகரம்:** புதிய நண்பரால் பிரச்னை ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். தொல்லை தரும் நபர்களிடம் இருந்து விலகுங்கள். சக ஊழியர்களின் ஒத்துழைப்பு ஓரளவுக்கு இருக்கும்.

**கும்பம்:** ஆரோக்யம் பற்றிய பயம் வேண்டாம். மகிழ்ச்சி கூடும். தன்னம்பிக்கையுடன் உங்கள் பணிகளில் ஈடுபடுவீர்கள். நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் உதவி செய்வீர்கள்.

**மீனம்:** வீண் பழிகள் அகலும். வெளிநாட்டிலிருந்து நற்செய்தி வரும். விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். முயற்சிகைகூடும். உடல் நலம் சீராகும். புதிய பொருள் சேரும்.

# சிங்கராஜ வனத்தில் ஒரு துரும்பும் அசைக்கப்படவே இல்லையாம்!!!

### சொல்லுகிறார்கள் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள்

**கொழும்பு,மார்ச் 27**

**சிங்கராஜ வனத்தில், காடழிப்பு இடம்பெறுவதாகக் கூறப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. அங்கு நேரடியாகச் சென்று அதனை உறுதிப்படுத்தியுள்ளோம். ஊடகங்களில் வெளிவரும் தகவல்களில் உண்மையில்லை என்று ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.**

சிங்கராஜ வனப்பகுதியில் ஹொட்டல் நிர்மாணிக்கப்படுவது தொடர்பில் ஆராய்வதற்காக ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 11 பேர் குறித்த பிரதேசத்துக்குச் சென்றிருந்தனர். அவர்களுடன் அரச அதிகாரிகளும் சென்றிருந்தனர். இது தொடர்பில் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் புமித பண்டார தெரிவித்ததாவது, அரசின் தலையீட்டில் நடக்கும் காடழிப்பு என்று இந்த விடயத்தில் அரசைத் தொடர்புபடுத்துகின்றனர். இங்கு சுமார் 20 முதல் 30 வருடங்கள் பழைமை வாய்ந்த தேயிலை மரங்களே உள்ளன. இங்கு வந்தால் அந்த உண்மையை அறிந்து கொள்ளலாம். இங்கு பக்கத்தில் மற்றுமொரு தனியார் இடமொன்று உள்ளது. யானைகள் கடக்கும் இடம். இங்கிருந்து 10 கிலோ மீற்றருக்கு அப்பால் தான் சிங்கராஜ வனம் உள்ளது- என்றனர். (க-இ)

## தவக்கால சிந்தனை

### மன்னிப்பே மகத்தானது

உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள் உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள் (மத் 5:44).

பகைவரை நேசிப்பதும் துன்புறுத்து வோருக்காக செபிப்பதும் சாத்தியமா?. கிறிஸ்துவின் போதனைகள் யதார்த்தத்துக்கு முரணானவை என்று வாதிடத்தோன்றும். ஆனால் அதுவே உண்மையான மகிழ்வுக்குரிய வாழ்வு முறையாகும்.

மறைந்த திருத்தந்தை புனித இரண்டாம் யோவான் பவுலை துருக்கிய இளைஞரொருவர் துப்பாக்கியால் சுட்டாhர். நெஞ்சுப்பகுதியில் படுகாயமடைந்த அவர் உடல் நிலை தேறிய பின்னர் சிறையிலிருந்த கொலை முயற்சியாளரை நேரில் சென்று நலம் விசாரித்து மன்னித்தார். சென்ற இடமெல்லாம் கருணைப்பூக்களை தூவிய திருத்தந்தை புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்டார்.

அமெரிக்கத் தேர்தலில் ஆபிரகாம் லிங்கன், தனக்கு எதிராகப் போட்டியிட்டு வசைபாடிய எட்வின் ஸ்டேண்டனை பலரும் அதிசயிக்கும் வண்ணம் பாதுகாப்புச் செயலராக நியமித்தார். உம்மைக் கடுமையாக விமர்சித்த உமது எதிரிக்கு முக்கிய பதவியா? என்ற நிருபர்களின் கேள்விக்கு ஆபிரகாம் லங்கனின் பதிலோ அதிசயமானது.

"அவரை என் நண்பனாக்கியதன் மூலம் என் எதிரியை அழித்தேன்" என்றார் லிங்கன். லிங்கன் சுட்டுக்கொல்லப் பட்டபோது "உலகின் தலைசிறந்த மனிதரில் ஒருவரை இழந்தோம்' என்று எட்வின் புகழாரம் சூட்டினார்.

இச்சம்பவங்கள் கிறிஸ்துவின் மதிப்பீடுகளை வாழ்வாக்கியவர்கள் விட்டுச் சென்ற மன்னிப்பின் மகத்தான உதாரணங்களாகும். எதிரியை மன்னிப்பதன் முதற்படியாக அவருக்கு எதிராகச் சூழ்ச்சி செய்வதை நிறுத்துவோம். இதுவே ஒப்புரவுக்கு வழிவகுக்கும்.

**எஸ்.யேசுதாஸ்,**
கொழும்புத்துறை.

## ரணிலுக்கு 72 வயது; பிரபலங்கள் வாழ்த்து

கொழும்பு,மார்ச் 27

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது 72 ஆவது பிறந்த நாளை கடந்த புதன்கிழமை மிகவும் எளிமையான முறையில் வீட்டிலேயே கொண்டாடினார்.

பிறந்தநாளன்று அவருக்கு அழைப்பை ஏற்படுத்திய பிரதமர் மகிந்த ராஜபக்ச, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் அவருக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

அரசியல் விவகாரங்கள் தொடர்பிலும் கருத்துகளைப் பரிமாற்றியுள்ளனர். குறிப்பாக எப்போது நாடாளுமன்றம் வருவீர்கள் என்று மகிந்த ராஜபக்ச வினவினாராம். அதற்கு புன்னகையை மட்டுமே ரணில் பதிலாக வழங்கினார் என்று தெரிவிக்கப்படுகிறது. அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் சிலரும் ரணிலுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

ஆசிய பசுபிக் வலய பொருளாதாரம் தொடர்பில் புத்தகமொன்றை எழுதிவரும் ரணில் விக்கிரமசிங்க, அதேவேளை [illegible] வருகின்றார். அவ்வப்போது அரசியல் மற்றும் இதர நிகழ்வுகளில் பங்கேற்றும் வருகின்றார்.(க-44)

## சட்டத்தை மீறினார் விமல் வீரவன்ச

### பொலிஸில் முறைப்பாடு

கொழும்பு,மார்ச் 27

புகையிலை மற்றும் மதுவரி ஆணையச் சட்டத்தின் விதிகளை மீறினார் என்ற குற்றச்சாட்டில், கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்சவுக்கு எதிராக பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்யப்படவுள்ளது. அமைச்சர் விமல் வீரவன்சவின் தலைமையில் கறுவாப்பட்டை சிகரெட் அண்மையில் அறிமுகம் செய்யப்பட்டது.

அறிமுக நிகழ்வில் விமல் வீரவன்ச, அந்தச் சிகரெட்டை வாயில் வைத்திருந்தார்.

இது புகையிலை மற்றும் மதுவரி ஆணையச் சட்டத்தின் விதிகளை மீறி, சிகரெட் பாவனையை ஊக்குவிக்கும் வகையில் அமைந்துள்ளது என்று குற்றஞ் சாடடப்பட்டுள்ளது.

இத்தகைய நடவடிக்கைகள் இலங்கைச் சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்டுள்ளன. அத்துடன் அறிமுகப்படுத்தப்பட்ட கறுவாப்பட்டை சிகரெட்டும் சட்டத்தின் விதிகளின் கீழ் சட்ட விரோதமானது என்று புகையிலை மற்றும் மதுவரி தொடர்பான தேசிய ஆணையத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூயஸ் கால்வாயில் சிக்கியது கப்பல்!




கெய்ரோ, மார்ச் 27
சுயஸ் கால்வாயால் பயணித்த 'எவர் கிறீன்' என்ற சரக்குக் கப்பல் கால்வாயில் திரும்ப முற்பட்ட வேளையில், போதிய இடவசதி இல்லாமல் இறுகி நிற்கின்றது.
எகிப்தை ஊடறுத்து இந்த சுயஸ் கால்வாய் வெட்டப்பட்டது. பெரும் எரிபொருள் செலவை மீதப்படுத்தும் வகையில் இந்தக் கால்வாய் வெட்டப்பட்டது. உலகின் 12 வீதமான ஏற்றுமதி சுயஸ் ஊடாகத்தான் மேற்கொள்ளப்படுகின்றது.
ஒவ்வொரு நாளும் சுமார் 50 சரக்குக் கப்பல்கள் இந்தக் கால்வாயூடாகப் பயணிக்கின்றன. இந்த நிலையில் மேற்படி கப்பல் கால்வாயை ஊடறுத்து நிற்கின்றமையால் பல பில்லியன் டொலர் பொருளாதார இழப்பைச் சந்திக்கும் நிலைக்கு உலக நாடுகள் குறிப்பாக மத்திய கிழக்குத் தள்ளப்பட்டுள்ளது.
இதையடுத்து கால்வாயின் கரைப்பகுதியை ஆழமாக்கி கப்பலைத் திருப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம)



உலகில் இரண்டாவது மிகப்பெரிய இயேசு சிலை என்று அறியப்படும் பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் அமைந்துள்ள சிலையைச் சீரமைக்கும் பணிகளை ஆரம்பித்துள்ளது பிரேசில. (ம)





# வடகொரியா மீண்டும் ஏவுகணைச் சோதனை

## அமெரிக்கா - தென்கொரிய கூட்டுப் பயிற்சிக்குப் பதிலடி

பியாங்யாங், மார்ச் 27
**கொரியத் தீபகற்பத்தில் அமெரிக்காவும் தென்கொரியாவும் கூட்டுப் போர்ப் பயிற்சியை நடத்தியிருந்த நிலையில் இதற்குப் பதிலடியாக ஏவுகணைச் சோதனையை நடத்தியுள்ளது வடகொரியா.**

ட்ரம்பின் ஐந்து வருட ஆட்சியின் இடைப்பட்ட காலத்தில் இருந்து வடகொரியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் பெரிய முறுகல் நிலை ஏற்படவில்லை. ட்ரம்பும் கொரியத் தீபகற்பத்தில் வடகொரியாவைக் கோபப்படுத்தும் நடவடிக்கைகளைத் தவிர்த்தே வந்தார். இந்த நிலையில் பைடன் அமெரிக்க அதிபராகப் பொறுப்பேற்ற பின்னர் கொரியத் தீபகற்பத்தில் அமெரிக்காவின் தலையீட்டை முன்னைய காலங்களைப் போன்று வலுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டார். இதன் ஒரு கட்டமாக அமெரிக்க, தென்கொரிய இராணுவங்களின் போர்ப் பயிற்சியும் அண்மையில் இடம்பெற்றது.
இதற்கு வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்னின் தங்கை கடும் கண்டனம் வெளியிட்டிருந்தார். 'அமெரிக்கா அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு நிம்மதியாக உறங்க வேண்டுமெனில் இத்தகைய நடவடிக்கைகளைக் கைவிட வேண்டும்' என்று வெளிப்படையாகவே அவர் எச்சரித்திருந்தார். இதைத் தொடர்ந்து வடகொரியாவின் முதன்மை எதிரி அமெரிக்கா என்று கிம் ஜோங் உன்னும் தெரிவித்தார். இந்தப் பின்னணியிலேயே அமெரிக்கா, தென்கொரியாவை எச்சரிக்கும் விதத்தில் வடகொரியா தற்போது ஏவுகணைச் சோதனையை நடத்தியுள்ளது. (ம)



# றொஹிங்யர்களின் முகாமில் தீ! பல்லாயிரம் கூடாரங்கள் அழிவு!

டாக்கா, மார்ச் 27
பங்களாதேஷில் அமைக்கப்பட்டுள்ள றொஹிங்யர்களின் கூடாரங்களில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட தீ விபத்தில் பல்லாயிரம் கூடாரங்கள் எரிந்தழிந்தன. குறைந்தது 25 பேர் இந்தத் தீ விபத்தில் இறந்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது.
பங்களாதேஷின் தெற்குப் பகுதியில் உள்ள றொஹிங்யர்களின் முகாமில்தான் இந்தப் பேரிடர் இடம்பெற்றுள்ளது. 15 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. மீட்புப் பணிகள் தொடர்ந்து வருகின்றது. (ம)



# ஈழத் தமிழருக்காகக் குரல் கொடுத்த எகிப்திய பெண் எழுத்தாளர் மரணம்!

கெய்ரோ, மார்ச் 27
எகிப்து நாட்டின் பிரபல பெண்ணிய எழுத்தாளரும் மருத்துவருமாகிய நவல் எல் சதாவி தனது 89ஆவது வயதில் காலமானார்.
தீவிர மனித உரிமைச் செயற்பாட்டாளரான அவர் ஈழத் தமிழர் இனப்படுகொலை தொடர்பாக 2010ஆம் ஆண்டு சர்வதேச ரீதியில் நிறுவப்பட்ட முதலாவது மக்கள் நீதி மையத்தில் பங்கெடுத்தவர். இலங்கையில் போரின் போதும் போருக்குப் பின்னரும் நடந்த தமிழர் இனப்படுகொலைகளைக் கண்டித்து அவை தொடர்பாக அனைத்துலக மட்டத்தில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று வாதாடி வந்தவர்.
தனது சொந்த வாழ்விலும் படைப்புகளிலும் அவர் காட்டிய நேர்மை, பெண்களின் பாலின சமத்துவம் மற்றும் உரிமைகளை நிலைநாட்டுவதில் கொண்டிருந்த தீவிர பற்றுறுதி என்பன புதிய தலைமுறைகளுக்கு ஊக்கமளித்தது. அவரது அறச் சீற்றமும் வெளிப்படையான பேச்சும் அவரை உயிராபத்துகளிலும் சிறைவாசங்களிலும் சிக்க வைத்தன.
தனது சிறு வயது முதல் ஆண்களின் மேலாதிக்கம் நிறைந்த இஸ்லாமியக் கடும் போக்கு சமூகத்தின் மத்தியில் பெண்கள் மீதான அடக்கு முறைகளுக் காகத் துணிந்து குரல் கொடுத்து வந்தவர். தீவிர இஸ்லாமிய மதவாதிகளால் கொலை மிரட்டலுக்கு ஆளான அவர் சில காலம் அமெரிக்காவில் தலைமறைவாக வாழ்ந்தார்.
நவல் எல் சதாவியின் மறைவுக்கு உலகெங்கும் பெண்ணியலாளர்களும் மனித உரிமையாளர்களும் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். 'இலங்கையில் ஜனநாயகத்துக்கான ஊடகவியலாளர்கள்' என்ற அமைப்பும் சதாவியின் மறைவு குறித்து அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் வெளியிட்டிருக்கிறது. (ம)

# 7 வயதுப் பெண் குழந்தை இராணுவத்தால் படுகொலை

## மியான்மரில் அரக்கத்தனம்

நைபிட்டோ, மார்ச் 27
மியான்மரில் இராணுவ ஆட்சிக்கு எதிராகப் போராடிய 7 வயதேயான பெண் குழந்தையை இராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர்.
மியான்மரில் ராணுவ ஆட்சிக்கு எதிரான போராட்டம் நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருகிறது. அதேவேளையில் இந்தப் போராட்டங்களை ஒடுக்குவதற்கு ராணுவம் அடக்கு முறையைக் கையாண்டு வருகிறது. இது வரை சுமார் 300 பேர் இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 7 வயதேயான பெண் குழந்தை உயிரிழந்தார். குறித்த பெண் குழந்தையும் அவரது தந்தையும் இராணுவத்துக்கு எதிரான போராட்டத்தில் தொடர்ச்சியாக கலந்து கொண்டுள்ளனர். இந்த நிலையிலேயே குறித்த சிறுமியின் வீடுபுகுந்து இந்த அரக்கத்தனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இந்த ஆண்டில்

# வீதி விபத்துக்களில் 400 பேர் வரை சாவு

கொழும்பு, மார்ச் 27
2021 ஜனவரி முதல் மார்ச் முதல் வாரம் வரை நாடு முழுவதும் விபத்துக்கள் காரணமாக சுமார் 400 பேர் வரை உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தக் காலகட்டத்தில் 369 ஆபத்தான விபத்துக்களில் 379 பேர் உயிரிழந் தனர். கடந்த வாரத்தில் பல்வேறு இடங்களில் இருந்து பல வீதி விபத்துக்கள் பதிவாகியுள்ளன.
மார்ச் 20 ஆம் திகதி பசறையில் இடம்பெற்ற விபத் தில் 15 பேர் உயிரிழந்ததுடன், 33 பேர் காயமடைந் தனர். இதேவேளை கடந்த ஆண்டில் மட்டும் 2 ஆயிரத்து 40 ஆபத்தான விபத்துக்களில் 2 ஆயிரத்து 141 பேர் உயிரிழந்தனர். இவ்வாறு உயி ரிழந்தவர்களில் பெரும்பாலோர் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள். இதன்படி, மொத்தம் 803 மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் விபத்துக்களில் உயிரிழந் தனர்.
538 பாதசாரிகளும் வீதி விபத்துக்களில் உயிரி ழந்தனர். மேலும், 263 பயணிகள், 196 ஓட்டுநர் கள், 159 சைக்கிள் ஓட்டுநர்கள் மற்றும் 147 பின் னிருக்கை பயணிகளும் உயிரிழந்தனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ-இ)

பசறை விபத்தில்

# பெற்றோரை இழந்த பிள்ளைகளை தத்தெடுக்க முன்வந்த மருத்துவர்



பதுளை, மார்ச் 27
அண்மையில் பசறைப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பெற் றோரை இழந்த மூன்று பிள்ளை களைத் தத்தெடுத்து வளர்ப்ப தற்கு மருத்துவர் ஒருவர் முன்வந் துள்ளார்.
அம்பாறை அரசினர் மருத்துவம னையின் மருத்துவ நிபுணர் வஜிர ராஜபக்ச, பெற்றோரை இழந்த அந்த மூன்று பிள்ளை களை யும், தாம் பொறுப்பேற் பதற்கான சட்டரீதியிலான நட வடிக்கைகளை மேற்கொள்ளு மாறு, பசறைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் கோரிக்கை விடுத்துள்ளார். மருத்துவரின் கோரிக்கை பதுளை மஜிஸ்ரேட் நீதிபதியின் கவனத்துக்கு கொண் டுவரப்பட்டுள்ளது. (வ-இ)

# புதிய அரசியல் இயக்கத்தை அரவிந்தகுமார் ஆரம்பிப்பார்?

கொழும்பு, மார்ச் 27
மலையக மக்கள் முன்னணியிலிருந்து நீக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் அரவிந்தகுமார், வெகுவி ரைவிலேயே புதியதொரு அரசியல் இயக்கத்தைக் கட்டியெழுப்பவுள்ளார் என்று அவருக்கு நெருக்கமான சிலர் தகவல் வெளியிட்டனர்.
அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டத் துக்கு ஆதரவு வழங்கிய அரவிந்தகுமாரை, ஆரம்பத்திலேயே தமிழ் முற்போக்குக் கூட்டணி இடைநிறுத்தியது. அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு மலையக மக்கள் முன்னணியிடம் ஒப்படைக்கப் பட்டது. அதற்கமைவாக விசாரணைகளை ஆரம்பித்த மலை யக மக்கள் முன்னணி, நான்கு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அரவிந்தகுமாரை கட்சியை விட்டும், அவர் வகித்த அனைத்து பதவிகளில் இருந்தும் அதி ரடியாக நீக்கியது.
மலையக மக்கள் முன்னணியின் இந்த நகர்வால் சினமடைந்துள்ள அரவிந்தகுமார், பதுளை மாவட்டத் தில் உள்ள முன்னணியின் ஆதரவாளர்களை தன்பக் கம் வளைத்து போட்டுள்ளார். கட்சித் தொண்டர்களுடன் அடுத்தக்கட்டம் குறித்து தீவிரமாக ஆலோசனை நடத்தி வருகின்றார்.
இதன்பிரகாரம் விரைவில் புதியதொரு அரசியல் இயக் கத்தை அவர் கட்டியெழுப்பக்கூடும். அதனை மையப் படுத்தியே தற்போது நகர்வுகள் இடம்பெறுகின்றன எனவும் தெரியவருகின்றது. (க-44)

# செவ்வாயன்று கூடுகிறது சு.க.

கொழும்பு, மார்ச் 27
சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் விசேட மத்திய செயற் குழுக்கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கி ழமை கட்சி தலைவர் மைத்திரிபால சிறிசேன தலை மையில் கூடவுள்ளது. இதில் முக்கிய சில முடிவுகள் எடுக்கப்படவுள்ளதால், கூட்டத்தில் தவறாது பங்கேற் குமாறு செயற்குழு உறுப்பினர்களுக்கு அறிவுறுத் தல் விடுக்கப் பட்டுள்ளது.
ஆளுங்கட்சியில் பங்காளியாக அங்கம் வகித்தா லும், சுதந்திரக்கட்சி கடும் அதிருப்தியுடனேயே இருக்கின்றது. அரசியிலிருந்து வெளியேற வேண் டும் என்று ஒரு தரப்பு அழுத்தம் கொடுக்கும் அள வுக்கு சிக்கல்கள் உச்சம் தொட்டுள்ளன.
இந்த நிலையில் மாகாண சபைத் தேர்தலுக்காக வேட்பாளர்களிடமிருந்து முன்கூட்டியே சுதந்திரக்கட்சி வேட்புமனுக்களைக் கோரியுள்ளது. எனவே, அடுத் தக்கட்ட நகர்வு சம்பந்தமான காத்திரமானதொரு முடிவு இந்தக் கூட்டத்தில் எடுக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (க-44)

# கூட்டணியாக தேர்தலில் போட்டி

கொழும்பு, மார்ச் 27
எதிர்வரும் மாகாண சபைகளுக்கான தேர்தலில் கூட்டணி அமைத்து போட்டியிடுவது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி கவனம் செலுத்தியுள்ளது. தம்முடன் இணையுமாறு ஐக்கிய மக்கள் சக்தி அழைப்பு விடுத்திருந்தாலும், அந்த அழைப்பை ஐ.தே.க இன்னும் ஏற்கவில்லை.
இரு தரப்புகளிலும் பேச்சுகள் இடம்பெற்று வருகின்றன. தேர்த லுக்கான கூட்டணி சாத்தியப்பாடு என்ற போதிலும், தேசிய மட்டத்திலான நகர்வுகளின் போது இணைந்து செயற்படுவதற்கு இரு தரப்புகளும் பச்சைக்கொடி காட்டியுள்ளன என்று தெரிவிக் கப்படுகிறது. (க-44)

# போதைப்பொருள் தபாலில் கடத்தல்

கொழும்பு, மார்ச் 27
நாட்டுக்கு எடுத்து வரப்பட்ட தபால் பொதிகளில் போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டன என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.
கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 27 ஆம் திகதி டுபாயில் இருந்து விமா னம் மூலமாக அனுப்பப்பட்ட பொதி யில், குறிப்பிடப்பட்டிருந்த பெயர் விலாசம் போலியானது.
குறித்த பொதியைப் பெற்றுக் கொள்ள எந்தவொரு நபரும் வருகை தராத நிலையில், அதில் கஞ்சா கலந்த குஷ் என்ற போதைப் பொருள் 27 கிராமும், குஷ் ஒயில் 38 கிராமும் கைப்பற்றப்பட்டன.
அதேவேளை, கடந்த வருடம் ஜன வரி மாதம் 4 ஆம் திகதி பிரான்சில் இருந்து டுபாய் ஊடாக நபரொருவ ருக்குப் பொதியொன்று அனுப்பப் பட்டுள்ளது. அதில் 4 ஆயிரத்து 962 போதை மாத்திரைகள் கண்டு பிடிக்கப்பட்டன. குறித்த பொதியும் போலியான பெயரில் அனுப்பப்பட் டுள்ளது. சம்பவங்கள் தொடர்பில் இலங்கை சுங்கம், பொதிகளை அனுப்பி வைத்த நிறுவனங்களுடன் இணைந்து மேலதிக விசாரணைகள் முன்னெடுத்துள்ள இது என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)

# சஹ்ரானின் திட்டத்துக்கு நல்லாட்சி அரசே பக்கபலம்

வாசுதேவ குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 27
எமது நாட்டில் பெரும் கலவரமொன்றை உருவாக்கி, தமது பலத்தை நிறுவுவதற்கே சஹ்ரானின் குண்டுத்தாக்குதல் நடத்தப் பட்டது. அதன்மூலம் ஜனநாயக ரீதியில் சுமூகமாக நடக்கவிருந்த ஜனாதிபதித் தேர்தலை கடந்த நல்லாட்சி அரசு நிறுத்த முயற் சித்தது. இதற்கு ஐக்கிய தேசிய கட்சியினரும், இன்றுள்ள ஐக்கிய மக்கள் சக்தியினருமே காரணம் என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.
ஏப்ரல் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை தொடர்பிலான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில் ... ..றதாவது,
உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களின் பின்னால் அரசியல் பின்புலமொன்று உள் ளது. அரசியல் நோக்கம் உள்ளது. தாக் குதல்களை நடத்தியது யார்? அவர்களின் பின்புலத்தில் யார் யார் இருந்தனர் என் பதை மாத்திரம் ஆய்வுக்கு உட்படுத்துவது போதுமானதல்ல.
சஹ்ரான் இஸ்லாமிய அடிப்படைவாத வன்முறைக் கருத்துகளை உருவாக்கியது உண்மை தான். சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புடன், இலங்கையில் இஸ்லா மிய இராஜ்ஜியமொன்று உருவாக்குவது அவருடைய நோக்கமாக இருந்தது. அது நீண்ட கால வேலைத்திட்டமாகும்.
சர்வதேச சதித்திட்டம் இதன் பின்புலத்தில் உள்ளதாக பேராயர் கூறியுள்ளார். ஆனால், ஆணைக்குழுவின் அறிக்கை யில் அவ்வாறு எதுவும் இல்லை. இந்தச் செயற்பாடுகள் ஆரம்பமான காலத்தில் ரணில் விக்கிரமசிங்க தான் பொலிஸுக்கு பொறுப்பாக இருந்தார்.
ஆனால், ஆணைக்குழுவின் அறிக்கை யில் அவரது பெயர் இல்லை. கடந்த அரசின் காலத்தில் மாகாண சபைத் தேர் தலை பிற்போட்டனர். ஜனாதிபதித் தேர்த லையும் பிற்போடும் தேவையே அவர்க ளுக்கு இருந்தது.
இல்லாவிட்டால் ஜனாதிபதித் தேர்தல் நடை பெறாத ஒரு சூழலை உருவாக்குவது அவர்களது எண்ணமாக இருந்தது. நாட் டில் கலவரமொன்றை ஏற்படுத்தி எம்.சி.சி உடன்படிக்கையை கைச்சாத்திட்டு, ஏகதி பத்தியத்தை உருவாக்க முற்பட்டனர். அதனால் தான் சஹ்ரான் ஊடாக குண்டுத்தாக்கு ல்களை நடத்தினர். உலகில் தமக்கு அடி பணியாத நாடுகளை சீரழிப்பதன் பின்பு லத்தில் அமெரிக்கதான் உள்ளது. எம்.சி.சி உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தும் பின்புலத்தை உருவாக்க அன்று இருந்த அரசு தவறிவிட்டது. என்றார். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏப்.21 தாக்குதல் தொடர்பில் எனக்கு எதுவும் தெரியாது

## நாடாளுமன்றில் மைத்திரி தெரிவிப்பு

**கொழும்பு,மார்ச் 27**

**ஏப்.21 பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் எனக்கு எதிராக "கோயபெல்ஸ்" யுக்தி கையாளப்பட்டு, மக்கள் மத்தியில் தவறான கருத்து விதைக்கப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதல் தொடர்பில் நான் முன்கூட்டியே அறிந்திருக்கவில்லை. புலனாய்வுத் தகவல்கள் எனக்குத் தெரியப்படுத்தப்பட்டிருந்தால், பேரவலம் ஏற்பட இடமளித்திருக்கமாட்டேன் என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.**



ஏப்.21 தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று மூன்றாவது நாளாக நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்தப் பயங்கரவாதத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அன்றும், இன்றும் நான் உறுதியாக இருக்கின்றேன். இதற்காக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பும் வழங்குவேன்.

எனது அமைச்சரவையில் இருந்த அமைச்சரொருவர் தாக்குதல் நடைபெற்று மறுநாளே அவசர ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தினார். இதன்போது தாக்குதல் குறித்து ஜனாதிபதி (மைத்திரிபால சிறிசேன) முன்கூட்டியே தகவல் அறிந்திருந்தார் எனவும், இதற்கு அவர் முழுமையாக பொறுப்புக்கூறவேண்டும் எனவும் அறிவிப்பு விடுத்தார். அதே போன்று எனது அரசில் இருந்த மேலும் சில அமைச்சர்களும் தாக்குதல் குறித்து ஜனாதிபதி முன்கூட்டியே அறிந்திருந்தும், உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்ற கருத்தை மக்கள் மயப்படுத்தினர். இதனால் தாக்குதல் தொடர்பில் தகவல்கள் தெரிந்தும், தடுத்து நிறுத்த நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற தவறான கருத்து மக்கள் மத்தியில் நிலவுகின்றது.

ஒரு பொய்யை மீண்டும், மீண்டும் தெரிவிப்பதன் மூலம் அதனை உண்மையாக்கலாம் என்பதே கோயபெல்ஸின் யுக்தியாகும். எனவே இந்தத் தாக்குதல் சம்பந்தமாகவும் அதே யுக்தி கையாளப்பட்டுத் தான் மக்கள் மத்தியில் எனக்கு எதிராகக் கருத்து பரப்பட்டுள்ளது. தவறான முறையிலும், தெளிவு இன்மையாலும், அரசியல் பகைமையாலுமே என்னை இலக்கு வைத்து கருத்துக்கள் எடுத்துரைக்கப்பட்டன.

எனது அமைச்சரவையில் ஒரு தரப்பே எனக்கு ஆதரவு வழங்கியது. பெரும்பாலானோர் ஒத்துழைப்பு வழங்கவில்லை. கொள்கையுடன் இணைந்து பயணிக்க கூடிய பிரதமரும் இருக்கவில்லை. இவ்வாறு பல தடைகள், நெருக்கடிகளுக்கு மத்தியில்தான் நாட்டை நிர்வகித்தேன். நாட்டுக்குப் பாதகமான விடயங்களைத் தடுத்து நிறுத்தினேன். எம்.சி.சி., சிங்கப்பூர் போன்ற உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதற்கு அனுமதி வழங்கவில்லை.

போர்க்காலத்தில் நான் பதில் பாதுகாப்பு அமைச்சராக பதவி வகித்துள்ளேன். சந்திரிக்கா அம்மையார் ஆட்சியிலும் பாதுகாப்பு சபை சென்றுள்ளேன்.

தாக்குதல் தொடர்பில் எனக்கு முன்கூட்டியே அறிவித்திருந்தால், நடவடிக்கை எடுக்காமல் வெளிநாடு செல்லும் அளவுக்கு நான் மிலேச்சத்தனமான மனிதன் கிடையாது. பேராயருடன் கலந்துரையாடி, கொழும்புக்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பித்து, பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்திருப்பேன் - என்றார். (க-44)

# புதிய அரசமைப்புக்கு தெரிவுக்குழு அவசியம்

## ஐக்கிய மக்கள் சக்தி மீண்டும் வலியுறுத்து

கொழும்பு,மார்ச் 27



புதிய அரசமைப்பை இயற்றும் பணிகளை முன்னெடுப்பதற்காக, நாடாளுமன்றத் தெரிவுக் குழு அமைக்கப்பட வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

நாடாளுமன்றம் நேற்று சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. இதன்போது ஒழுங்குப்பிரச்சினையொன்றை எழுப்பிக் கருத்து வெளியிடுகையிலேயே எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியல்ல இதனை வலியுறுத்தினார்.

தேர்தல் மற்றும் வாக்கெடுப்பு முறைமை தொடர்பில் மேற்கொள்ளப்படவேண்டிய சட்டத்திருத்தங்கள் தொடர்பில் ஆராய்வதற்குத் தெரிவுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றம், மாகாணசபை மற்றும் உள்ளாட்சி சபை என மூன்று கட்டமைப்புகள் குறித்து இந்தக் குழு ஆராயுமா?

புதிய அரசமைப்பை இயற்றும் பணிகளை முன்னெடுப்பதற்காக சட்டத்தரணிகள் குழுவை அரசு அமைத்துள்ளது. அந்தக் குழு தனிப்பட்ட ரீதியில் செயற்பட்டு வருகின்றது. நாம் இந்தக் குழுவிடம் யோசனை முன்வைக்கமாட்டோம். எனவே, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைத்து அதன் ஊடாக் அரசமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அதில் தேர்தல் முறைமை பற்றியும் ஆராயலாம். இதனைச் செய்யாமல் அரசு எல்லாவற்றையும் குழப்பிக்கொண்டுள்ளது. இதனால் மாகாணசபைத் தேர்தல் கூட பிற்போடப்படலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்தன,

" மூன்று தேர்தல் முறைகள் குறித்தும் இந்தக் குழு ஆராயும். மக்களுக்கு இது தொடர்பில் நாம் வாக்குறுதி வழங்கியுள்ளோம். அத்துடன், மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு சட்ட ரீதியாக உள்ள தடைகளைத் தளர்த்துவதும் இதன் நோக்கம். எனவே, ஊகத்தின் அடிப்படையில் கருத்துகளை முன்வைக்ககூடாது" - என்றார். (க-44)

# கொழும்பு நகரில் வளி மாசடைவு

கொழும்பு,மார்ச் 27

கொழும்பு நகர்ப் பகுதியில் தற்போது வளி அதிக அளவில் மாசடைந்துள்ளது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் சுற்றாடல் பிரிவின் பணிப்பாளர் சரத் பிரேமசிறி தெரிவித்தார்.

அதேவேளை கண்டி, குருநாகல் உள்ளிட்ட சில நகர்ப் பகுதிகளிலும் வளி மாசடைதல் அதிகரித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.(க-இ)

# காணிகளை அளவிட நவீன தொழில் நுட்பம்

கொழும்பு, மார்ச் 27

காணிகளை அளவிடும் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்காக நவீன தொழில்நுட்பங்களைக் கொண்ட நடமாடும் சேவை நாடு முழுவதிலும் முன்னெடுக்கப்படுகிறது என்று காணி அமைச்சர் எஸ். எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

காணிகளை அளவிடும் நடவடிக்கை தாமதமாகியிருப்பதால் பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. காணிகளை அளவிடுவதில் நிலவும் தொழில்நுட்பக் கோளாறுகளும் இனங்காணப்பட்டுள்ளன. நடமாடும் சேவையின் ஊடாக இதற்குத் தீர்வு காண எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ப)

# ஏப்ரல் மாதமும் விசேட விவாதம்

## 5 நாள்கள் கூடுகிறது நாடாளுமன்று

கொழும்பு,மார்ச் 27

ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை 5 நாள்கள் நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அதற்கு அமைவாக, ஏப்ரல் 5ஆம் திகதி திங்கட்கிழமை விசேட தினமாக நாடாளுமன்றம் கூடவுள்ளது. அன்று முற்பகல் 10 மணி முதல் மாலை 4 மணி வரை முழுநாளும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரத்தை ஒதுக்குவதற்குத் தீர்மானி க்கப்பட்டுள்ளது என்று நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க தெரிவித்தார்.

அன்றையதினம் தேர்தல் முறைமையைச் மறுசீரமைப்பதற்கான பரிந்துரைகளை முன்வைப்பதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைப்பதற்கான பிரேரணையொன்றை நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கும் முடிவெடுக்கப்பட்டுள்ளது என்று செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

அத்துடன், 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்திய ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தை ஏப்ரல் 7 ஆம் திகதி நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள் ளது.

இதற்கு மேலதிகமாக, அரசியல் பழிவாங்கள் தொடர்பாக விசாரித்து தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை ஏப்ரல் 8 மற்றும் 9ஆம் திகதிகளில் நாடாளுமன்றில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளவும் நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 6ஆம் திகதி இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள், செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழான கட்டளைகள், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைத் திருத்துவதற்கான தீர்மானம் உள்ளிட்ட 8 விடயங்கள் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

அன்றையதினம் முற்பகல் 10 மணி முதல் மாலை 4.30 மணி வரை இவை குறித்த விவாதம் நடைபெறவிருப்பதுடன், மாலை 4.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணை மீதான விவாதம் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் இன்று தேர்

வண்ணை வைத்தீஸ்வரன் கோவில்,கோபாலச் செட்டியார் திருமகனான வைத்திலிங்கச் செட்டியார் என்பவரால் இற்றைக்கு இருநூற்றுப் பதினொரு வருடங்களுக்கு முன் (கி.பி. 1790 ) கட்டுவிக்கப்பட்டது.

கோபாலச் செட்டியார் , ஒல்லாந்தர் அரசு செய்யும் காலத்தில் தமது மனைவியாரோடு சோழநாட்டிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்து , இங்கேயே குடியாகவிருந்து. ஒல்லாந்த அரசினரின் மொழிபெயர்ப்பாளராக இருந்த கொச்சிக்கணேசையர் என்னும் பிராமணரிடம் உத்தியோகம் பார்த்து வந்தார் . அவர் யாழ்ப்பாணம் வந்த காலம் முதல் வேப்பமரமொன்றின் கீழ் விநாயகரை வைத்துப் பூசித்து வந்தார் . அவ் விநாயகர் கோவில் இப்போது வேம்படிப்பிள்ளையார் கோவில்(கடைத் தெருப் பிள்ளையார் கோவில் ) எனப்படுகிறது .

ஒரு நாள் ஐயரவர்கள் காரணமில்லாமல் கோபாலச் செட்டியாரைக் கண்டித்தபோது செட்டியார் உத்தியோகத்திலிருந்து விலகி , பலசரக்கு வியாபாரம் செய்து வந்தார். வியாபாரம் செய்யும் காலத்தில் அவர் ஒல்லாந்த தேசாதிபதி வீட்டிற்கும் பலசரக்குக் கொடுக்கும் வழக்கம் உடையவராயிருந்தார் . இவருடைய நேர்மை , ஒழுக்கம் , விசுவாசம் முதலியவற்றால் தேசாதிபதியின் மனைவியார் செட்டியாரிடம் மிகவும் அபிமானம் உள்ளவரானார் .

இந்நாள்களில் இந்தியாவிலிருந்து ஈழம்வந்த கூழங்கைத் தம்பிரான் , செட்டியாரிடம் நட்புக் கொண்டு அவருடன் வசித்து வந்தார். அவர் தமிழ் இலக்கண இலக்கியங்களிலும் சித்தாந்த சாஸ்திரத்திலும் மிக்க பாண்டித்தியம் உடையவர். சிறந்த இறை பக்தர். இவர் அங்கு இருக்கும் போதுதான் செட்டியாருக்கு ஒரு மகன் பிறந்தான். புதல்வனைப் பார்த்த தம்பிரான் ஆசீர்வதித்து , ' இவன் பெரும் கருமங்கள் செய்யப் பிறந்துள்ளான். இவனுக்கு வைத்தியலிங்கம் என்று பெயரிடுக ' என்றார் அவ்வண்ணமே பெயரிட்டனர்.

வைத்திலிங்கத்துக்கு பன்னிரெண்டு வயது ஆனது ஒரு சமயம் பையனைத் தந்தை கடையில் விட்டுப் போயினர். அச்சமயம் தேசாதிபதியின் மனைவி கடைக்கு வந்தார் செட்டியார் எங்கே என்று அவர் பையனை வினவினார். வைத்திலிங்கம் ஓர் மாதுளங்கனியை அந்த அம்மையிடம் கொடுத்து ஏற்க வேண்டினார். அம் மாதுளங்கனியை அம்மாது உளம் கனிந்து வாங்கினார் . போசனம் முடிந்து செட்டியாரும் வந்தார். பையன் அவரது மைந்தன் என்று அவர் மூலமறிந்த அம்மையார் வைத்திலிங்கத்தைத் தன் வண்டியிலேற்றித் தம் வீட்டிற்கு அழைத்தேகினர் . தேசாதிபதிக்குப் பிள்ளையில்லாமையால் , வைத்திலிங்கம் அவர்களது அரண்மனையிலேயே சுவீகாரப் புதல்வன் போல வளர்ந்தார் அவர்களிடம் ஒல்லாந்தர் பாஷை பயின்றார். 18 வயது வரை தேசாதிபதி வீட்டு வாழ்வே அமைந்தது.

ஒரு நாள் தேசாதிபதி முத்துக் குளிப்பை குத்தகைக்கு விடப் போவதைக் கேள்விப்பட்ட வைத்திலிங்கம் தன் வளர்ப்புத் தாயாரான அம்மையாரிடம் ' அக்குத்தகையை நான் வாங்க விருப்பமுடையேன் ' என்றார். அதற்கு உதவி புரிய அம்மையாரை வேண்டினார் . அம்மையார் ஒரு கடிதம் வரைந்து சிறுவனிடம் கொடுத்து கச்சேரியில் தேசாதிபதியிடம் கொடுக்கும்படி கூறினார் . தேசாதிபதி முகமலர்ச்சியுடன் வைத்திலிங்கத்தைப் பார்த்து முத்துக் குத்தகை வாங்கப் போகிறாயா ? என்று வினவ ' ஆம் ஐயா ' என்றான் சிறுவன் . பக்கத்தே பிரதான மந்திரியாகவிருந்த கொச்சிக்கணேசையர் ' நீயும் குந்தகை வாங்கப் போகிறாயா ? என்றார் ஏளனமாக , ஐயரின் மனோபாவத்தை அறிந்த தேசாதிபதி கோபித்து ஐயரைப் பார்த்து ' குத்தகையை இச்சிறுவன் பெயருக்கு எழுதிப் பிணையாக என் பெயரை எழுதுக ' என்றார் . ஐயர் அவ்வண்ணமே எழுதினார் . குத்தகையை ஏற்றுக் கிரமமாக நடத்தி ஒரு கணிசமான தொகையை இலாபமாகப் பெற்றார் . தொடர்ந்து முத்து குத்தகையை ஏற்று , முத்து வியாபாரம் செய்யும் காலத்தில் கூழங்கைத் தம்பிரானிடம் கல்வி பயின்றார் . இவருடன் கூடிக் கற்றவர்கள் தென்கோவை நெல்லைநாத பண்டிதரும் , மாதகல் மயில் வாகனப் புலவருமாவர் . முத்து வியாபாரத்தில் மட்டுமல்லாமல் வைத்திலிங்கச் செட்டியார் அவர்கள் யானை வாங்கி விற்கும் வியாபாரமும் செய்து வந்திருக்கின்றார் . யானை வியாபாரம் செய்யும் நிறுவனம் ஒன்று இவரை தங்களது வியாபாரத்திற்கு என எற்றுக் கொண்டதற்காக வழங்கிய டச்சுமொழியிலான ஆவணம் சான்றாக அமைவதுடன், அந்த நாளில் வைத்திலிங்கச் செட்டியாருக்கு இருந்த செல்வாக்கையும் மதிப்பையும் இது எடுத்துக்காட்டுகிறது.

பெரும் பொருள் ஈட்டி தனவந்தரான வைத்திலிங்கச் செட்டியார் தனக்கென ஒரு மாளிகை அமைக்க எண்ணிய போது கூழங்கைத் தம்பிரான் செட்டியாரிடம் ' உன்னை இந்நிலைக்குக் கொண்டு வந்த பரமபிதாவாகிய வைத்தியநாதப் பெருமானுக்கும் தையல்நாயகித் தாயாருக்கும் யாழ்ப்பாணத்தில் ஆலயம் அமைக்க வேண்டும் " என்று கூறினார் செட்டியார் அதற்குச் சம்மதித்தார்.

சைவ ஆலயங்களை இடித்தும் , சைவசமயத்தினரைத் துன்புறுத்தியும் தங்கள் சமயத்தை பரப்பிவந்த ஒல்லாந்தர் மத்தியில் சைவத்தையும் தமிழையும் வளர்க்க முற்பட்ட வைத்திலிங்கச் செட்டியார் தனது செல்வாக்கைப் பாவித்து வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலைக் கட்டுவதற்கு ஒல்லாந்த அரசிடம் அனுமதியைப் பெற் றார். 1787 ஆம் ஆண்டில் ஆரம்பித்து 1790 இல் ஆலைய திருப்பணி வேலையைப் பூர்த்திசெய்து , வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமானுக்கான பரிவாரக் கோயில்களையும் அமைத்து , அதே ஆண்டிலேயே (1790) சாதாரண வருடம் சித்திரை மாதம் பூர்வபட்ச சப்தமி யோடு கூடிய புனர்பூச நட்சத்திரத்தில் கும்பாபி ஷேகம் செய்வித்தார். நித்திய நைமித்தியங்கள் கிரமமாக நடைபெற்றுவரச் செய்தார்.

(14ஆம் பக்கம் பார்க்க)



குறைவிலா செல்வம் பெற்று நிறைவாழ்வு வாழ எம்மவருக்கு வரம் அருள்வாய்!

Nadarasa Kajanthan
நடராசா கஜந்தன்
NJ Since 1978
New Maithily Jewellers
நியூ மைதிலி ஜுவலர்ஸ்
DEALERS IN GENUINE ORNAMENTS

காலத்தை வெல்லும் கலை நுட்பத்துடன் மின்னும் பொன்
No.38,40, Kasthuriyar Road, Jaffna. Tel: 021 221 78 78 Fax: 021 221 78 77
E-mail: newmaithily40@gmail.com newmaithily Jewellers 021-2217878

Nadarasa Kajanthan
நடராசா கஜந்தன்
Santhosh Jewellers
சந்தோஷ் ஜுவலர்ஸ்
DEALERS IN GENUINE ORNAMENTS
021-2211177 santhoshjewellers1188@gmail.com
santhoshjewellers 021-2211188
இல.97A, 99V, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். No. 97A, 99V, POWERHOUSE ROAD, JAFFNA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ABI Fashion World
அபி பஷன் வேல்ட் இன்
தமிழ் சிங்கள புதுவருட மாபெரும் விலைக்கழிவுகள்...
எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை வரவேற்கும் முகமாக
22.03.2021 முதல் 14.04.2021 வரை
70% சிறப்பு விலைக் கழிவுகளுடன் புத்தாண்டை மகிழ்வுடன் வரவேற்போம்.
சிறுவர் முதல் பெரியவர்கள் வரையான அனைவருக்கும் ஏற்ற உடைகள் ஒரே இடத்தில்
புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட புத்தம் புது டிசைன்களுடன் கூடிய ஆடை தினுசுகள் அண்மையில் பிரத்தியேகமாக திறக்கப்பட்ட திருமணப் பட்டுப் புடைவைகளின் காட்சியறையில்
அபி பஷன் வேல்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
112, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 3738






# வண்ணை...

ஆலயத்தைப் தாமே இனிது பரிபாலித்த பின் , தமது புத்திரர்களான ஸ்ரீ கோபாலச் செட்டியார் , ஸ்ரீ கந்தப்பச் செட்டியார் ஆகியோரிடம் ஒப்புவித்துவிட்டுத் தமது அந்திம காலத்தைக் காசியிற் கழிக்க விரும்பி அங்கு சென்று சில காலம் சீவித்த பின் , திருவருளால் தமது உடல் நிரியாணத்தை உணர்ந்து கருங்கல்லினால் ஒரு தொட்டி அமைப்பித்து , அத்தொட்டியில் ஆரோகணித்துக் கங்கையில் இறங்கினார். இவர் போன்ற மகா புண்ணிய புருஷர் உலகில் முன்னும் பின்னும் இருந்ததில்லை என்றால் மிகையாகாது .

பின் கோபாலச் செட்டியார் , கந்தப்பச் செட்டியார் , பொன்னுச்சாமிச் செட்டியார், வைத்தியலிங்கச் செட்டியார் ஆகியோர் பரிபாலித்து , சில காலம் வைத்தியலிங்கச் செட்டியாரின் மனைவியார் திருமதி வை.கண்ணம்மாஆச்சி அவர்களாலும், பின்னர் அவர்களது புதல்வர் கந்தப்பச் செட்டியாராலும் கோபாலன் செட்டியார் வைத்திலிங்கச்செட்டியார் அவர்களால் 1805 ம் ஆண்டு வரையப்பட்ட சாசனத் தின்படி அவரது (வழித்தோன்றல்களால்) தொடர்ந்தும் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது .

நல்லைநகர் ஆறுமுகநாவலர் தமது முதற் பிரசங்கத்தை இவ்வாலய வசந்த மண்டபத்திலேயே செய்தார் . அவர்களுக்குப் பின் வித்துவ சிரோன்மணி பொன்னம்பலபிள்ளை புராணப் பிரசங்கம் செய்தார் . பின் சங்கரசுப்பையர் சுவாமிகள் அப்பணியைச் செய்து வந்தார்கள் . நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன நிறுவுனர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் ஸ்வாமிகள் , துறவு பூணும் வரை முத்தமிழ் மணி சி.எஸ்.மணிபாகவதர் என்ற பூர்வாஸ்சிரம நாமத்துடன் சமயப் பிரசங்கங்களை இவ்வாலய வசந்தமண்டபத்திலே செய்து வந்தார்கள்.

சைவத்திற்கும் தமிழுக்கும் நிலைக்களனாக விளங்கியது இவ் வைத்தீஸ்வரன் கோவில் வசந்தமண்டபம் என்றால் மிகையாகாது .

கூழங்கைத் தம்பிரான் வைத்தீஸ்வரப் பெருமான் மீது ஒரு தனிக்கவி பாடியுள்ளார் . இன்னும் கொச்சிக்கணேசையர் தையல் நாயகி மீது பாஞ்சலும் , அராலி விஸ்வநாத சாஸ்திரியார் வண்ணைக் குறவஞ்சியும், வட்டுக்கோட்டைக் கணபதி ஐயர் வைத்திலிங்கக் குறவஞ்சியும் பாடியுள்ளார்கள். இவ்வாலயம் தான் புராதன ஆலயமென்று மூதியோர் சொல்லக் கேட்டுள்ளோம். இவ்வாலயம் மூர்த்தி , தலம் தீர்த்தம் மூன்றும் ஒருங்கு அமையப்பெற்றது . இத்தலத்திற்கு தீர்த்தம் வண்ணை மேற்கிலுள்ள வில்லூன்றி என்னும் சமுத்திர சங்கம தீர்த்தமாகும். இலங்கையின் ஏனைய பாகங்களிலும் யாழ்ப்பாணத்திலும் உள்ள சைவத் தலங்களெல்லாம் இவ்வாலயத்தைப் பின்பற்றி நித்திய நைமித்தியங்கள் நடத்துவதற்கு இக் கோயிலே ஆதாரமாக விளங்கியது . இத்தலத்தில் உலக மாதாவாகிய பாலாம்பிகை (தையல்நாயகி ) அம்பாளோடு வைத்தீஸ்வரப் பெருமான் கோயில் கொண்டெழுந்தருளி சைவ நன்மக்களுக்கு கருணை சுரந்தருளுகிறார்.

ANNAI NAGAA FOOD City
யாழ் மண்ணின் முன்னோடி
அன்னை நாகா பூட் சிற்றி
3ம் தசாப்தத்தை நோக்கி...
500,000/= ரூபாவிற்கு மேல் பெறுமதியான மாபெரும் பரிசு மழை
தங்க நாணயங்கள்
ஆறுதல் பரிசில்கள்
100 இற்கும் மேற்பட்ட பொருட்களுக்கு விசேட விலைக் கழிவு
யாழ் நகர் 175, K.K.S Road, Jaffna. Tel: 021 222 5515
கொக்குவில் No.38, K.K.S.Road Jaffna. Tel. 021 221 7133
நல்லூர் 341,343, Pointpedro Road, Nallur, Jaffna. Tel: 021 021 7515
175,K.K.S.Road. Jaffna. T.P: 021 222 5515, 021 221 6889





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ வைத்தீஸ்வர பெருமானின் அருளைப் பெறுவோம்



இன்று ஸ்ரீ வைத்தீஸ்வரப் பெருமான் தனது அருள் சக்தியான ஸ்ரீ வாலாம்பிகா சமேதரராக தேரேறி வருகின்றார். ஆன்மாக்களின் மலங்களை அழித்து அருள் ஆட்சி செய்யும் சிறப்பினை அடியார்கள் எல்லோரும் அருள் வேண்டி வந்து அரோஹரா கோஷம் செய்யும் காட்சி அற்புதமானது, ஆனந்தமானது.

ஸ்ரீ வைத்தீஸ்வரப் பெருமான், விநாயகர், சுப்பிரமணியர், அம்பிகை, சண்டேஸ் வரர் சமேதராக பஞ்ச ரதத்தில் பவனி வரும் திருக்காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். இன்றைய தேர்த் திருவிழாவில் பங்குபற்றி பெருமானின் தெய்வ அருளை அள்ளிக்கொள்ளும் அடியார்கள் பேரின்பப்பேறு பெற்றவர்கள்.

"வேண்டத்தக்க தறிவோய் நீ
வேண்டி நீயாது அருள் செய்தாய்
வேண்டமுழுதும் தருவோய் நீ
யானும் அதுவே வேண்டின் அல்ல
வேண்டும் அயன்மாற் கரியோய் நீ
வேண்டும் பரிசொன்றுண்டென்
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
அதுவும் உந்தன் விருப்பன்றே

என்கின்ற மணிவாசகரின் மணி வாக்குப் போல எமக்கு வேண்டிய இஷ்டசித்திகளையும், இன்பத்தையும் தந்தருள வேண்டும் என்று பெருமானைப் பிராத்திப்போமாக

**ஈ.சரவணபவன்**
உதயன் குழுமத் தலைவர்

# வைத்தீஸ்வரனின் பஞ்சரத பவனி நெஞ்சினில் இனித்திடும் காட்சி



"வண்ணை வைத்தீஸ்வரனுக்கு இன்று தேர்த்திருவிழா. அழகிய தேர்கள் அசைந்து வரும் அற்புதக் காட்சியைக் காணக் கண் கோடி வேண்டும். இது ஓர் அற்புதமான ஆனந்த கோலாகலக் காட்சி பக்திபூர்வமான. பஞ்சரத பவனி நெஞ்சினில் இனித்திடும் காட்சியாகும்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரால் கதாப்பிரசங்கம் செய்யப்பட்ட இந்தக் கோவில் சரித்திரப்பிரசித்திபெற்ற ஒரு திருக்கோயிலாகும். இங்கே சிவபெருமானுக்குரிய சக்தியாக ஸ்ரீமத் வாலாம்பிகை வீற்றியிருக்கின்றார். இன்று பவனி வரும் 5 தேர்களும் ஆடி ஆடி அசைந்து வரும் காட்சி ரம்மியமானது. முதலில் விநாயகப் பெருமானின் தேரும், அடுத்தது முருகப்பெருமானின் தேரும், அதற்கு அடுத்தாற்போல் வைத்தீஸ்வரன் சோமஸ்கந்த மூர்த்தமாக தேரில் எழுந்தருள்வார். அதற்குப் பின்னால் தையல் நாயகி அம்மன் தேரும் கடைசியில் சண்டேஸ்வரர் தேரும் வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

ஆகவே இன்றைய தேர்த்திருவிழா சிறப்புற நிகழ்ந்தேற அவனருளாலே அவன்தாள் வணங்கி அருளாசி நல்கி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

**நல்லை ஆதின குருமுதல்வர்**
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்

# கொரோனாவில் இருந்து விடுபட வைத்தீஸ்வரனை வழிபடுவோம்



சீரும் திருவும் பொழியும் புண்ணிய பூமியாகிய இலங்கை மனித்திருநாட்டின் மகுடமெனத் திகழும் சிவபூமியாகிய யாழ்ப்பாணத்தில் வண்ணையம்பதியில் கோயில் கொண்டு அருளாட்சி செய்கின்ற ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர பெருமானின் வருடாந்தப் பெருந்திருவிழாவின் ரதோட்சவம் இன்றாகும்

கொடிய வினை நீக்கி கொடிய பகை போக்கி வழிபடும் அடியவர்களின் வல்வினை களைந்து தேவாதி தேவகனாக மிளிரும் ஐயன் சிவன் இன்று தேரேறி வந்து இன்னருள் புரிகின்றான் "பிறவிப் பிணி தீர்க்கும் மருந்தாக விளங்கும் சிவபெருமானின் இந்த மகோற்சவத்தில் ரதோட்சவ நிகழ்வானது ஒவ்வொரு ஆன்மாவும் பிறவிப்பிணியை அகற்றி உயர்வு பெறக்கூடிய உன்னத நிலையை உருவாக்கும் தன்மை வாய்ந்தது. எனவே இந்த நாட்டில் பரவி வரும் கொரோனா வைரஸ் நோயிலிருந்து மக்கள் அனைவரும் விடுபட வேண்டும் என்று எல்லாம் வல்ல ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர பெருமானின் பாதார விந்தங்களை பிரார்த்திப்போமாக !

"மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்"

ஈசான சிவாச்சாரியார்
சிவப்பிரமஸ்ரீ
**சொ .இ.விக்கினேஸ்வர குருக்கள்**
மகோட்சவகுருவும்
ஆலயபிரதம குருவும்

# கொடியேற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

அருள்மிகு நீர்வேலி கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

அடியார்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி ஆலயத்துக்கு வருகை தருமாறு ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

(ஐ)

# தேர்த்திருவிழா

நீர்வேலி,மார்ச் 27

நீர்வேலி வடக்கு காளி அம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 17 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வரும் நிலையில் இன்று சனிக்கிழமை தேர்த்திருவிழா நடைபெறவுள்ளது.

அடியார்கள் சுகாதார நடைமுறைகளைப் பேணி வருகை தருமாறு ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ)

# அலங்காரத் திருவிழாவும் இறுவட்டு வெளியீடும்

அளவெட்டி,மார்ச் 27

அளவெட்டி கிழக்கு கும்பலை நரசிம்ம வைரவர் ஆலயத்தின் பங்குனி உத்தர வருடாந்த அலங்காரத் திருவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

அன்றைய தினம் பிற்பகல் 3 மணிக்கு " நாதகீதம்" என்னும் இறுவட்டும் வெளியிடப்படவுள்ளது.

காங்கேசன்துறை. கோல்டன் ஸ்ரார் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் பீ.கருணாகரனின் இசையில் எஸ்.பானுஜா, எஸ்பரணீதர சர்மா, எஸ்ஜீ. எஸ்.கோகுலன் ஆகியோரால் பாடப்பட்ட பாடல்கள் அடங்கிய இறுவட்டே வெளியிடப்படவுள்ளது. (ஐ-9)

# குடமுழுக்கு

யாழ்ப்பாணம்,மார்ச் 27

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை பி.ஏ.தம்பி வீதி அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் ஆலய குடமுழுக்கு எதிர்வரும் புதன்கிழமை காலை 9.16 மணி முதல் 10.16 மணி வரையுள்ள சுப நேரத்தில் நடைபெறவுள்ளது.

எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



## ஐந்து தேர் பவனி காண வந்தோம்!

வாலாம்பிகை நாயகரே! வண்ணை வைத்தீஸ்வரனே வருக!!
வலம் வந்து வணங்குகின்றோம் ! வரமருள வேண்டும் ஐயா! !
காலாலுன் திருக்கோயில் வலம் வர கர்ம வினைகள் தீர்ந்திடுமே!
கணபதியும் கந்தனும் கூடவே அருட்காட்சி தாருமையா!
ஆலாலமுண்ட நீலகண்டனே! ஐந்து தேர் பவனி காண வந்தோம் !!
ஆறுதலும் தேறுதலும் தந்து ! காத்தருள வேண்டும் ஐயா !!
பாலாபிஷேகம் கண்டோம் பக்தர்கள் புடை சூழவந்தே
அருள்புரிய வேண்டும் வண்ணை வைத்தீஸ்வரனே
வரம் தருக வருக! வருக!!

**கலாபூஷணம்**
**இராசையா ஸ்ரீதரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலைக்கேள்விக்கான கோரல் (IFB-2021/01)
## கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அலுவலகம் - வடக்கு மாகாண சபை
## மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடை - 2021

01. வட மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள பெறுகைக்குழுவின் தலைவரால் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகவுடையோரும் தகைமை பெற்ற வருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.
02. கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
03. ஒப்பந்தமானது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA), கட்டட நிர்மாணத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு,பொதுநிதி சுற்றறிக்கை, இல.04/2016(i)ற்கு அமைவாக இவ்விலைமனுக் கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வடமாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப்பட்டியலில் (Black list) சேர்த்துக் கொள்ளப்படாததுமான கேள்விதாரரிற்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தகுதியான கேள்விகள் கிடைக்காதபட்சத்தில் கீழ் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்திற் கொள்ளப்படும்.
04. தேவையான தகைமைகள், விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 4ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் Schedule இல் பகுதி 5ல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **ஆணையாளர், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் - வ.மா, முதியோர் இல்ல வளாகம் , கண்டி வீதி கைதடி , யாழ்ப்பாணம் (தொலைபேசி இல – 021 205 7063, 021 223 2212** ) என்னும் முகவரியிலிருந்து 29.03.2021ம் திகதியில் இருந்து 12.04.2021ம் திகதி வரை காலை 9.00 மணிக்கும் மாலை 3.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக **ரூபா.3500.00** செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை, பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
06. கேள்வி இரு (மூலம், பிரதி) பிரதிகளில் தயாரித்து **15.04.2021**ம் திகதியன்று பி.ப.2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் **ஆணையாளர், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் - வ.மா, முதியோர் இல்ல வளாகம் , கண்டி வீதி, கைதடி , யாழ்ப்பாணம்** என்னும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள், அவைகளை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமூகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
07. கீழ்க்காட்டப்படும் கேள்விகள் கேள்விசமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 63 நாட்களுக்கு செல்லுபடியாகும்.
08. கேள்விப் பிணைவைப்புத்தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
09. கேள்வி தொடர்பான முன் கேள்விச் சபைக்கூட்டம் **கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்,-** முல்லைத்தீவு என்னும் முகவரியில் 05.04.2021 அன்று காலை 11.00மணிக்கு இடம்பெறும்.
10. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைக் குழுவின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

| | கேள்வி அடையாள இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (வற் நீங்கலாக) | ஒப்பந்தக் காலம் (மாதம்) | வேண்டப் படும் தரம் | வேண்டப் படும் கேள்விப் பிணையின் தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | NP/15/03/02/ PSDG/P-MPCS/2021/ 07 | **EXPENSES NECESSARY TO BE INCURRED FOR IMPROVEMENTS OF HEAD OFFICE BUILDING PUTHUKKUDIYIRUPPU MPCS IN MULLAITIVU DISTRICT-2021** | 3.63 | 90 Days | C8 or C7 (Building) | 37,000.00 |

தலைவர்,
திணைக்கள பெறுகைக்குழு,
கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்,
வடக்கு மாகாண சபை.

# கண்ணீர் காணிக்கை



**தோற்றம்:28.11.1936 மறைவு:23.03.2021**

எமது பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக கடமையாற்றும் **திருமதி றஜனி றொபேட் பிரேமதாஸ்** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி சிவபாக்கியன் நல்லம்மா**

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரதேச செயலரும், உத்தியோகத்தர்களும்,**
**உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்**
**பிரதேச செயலகம் வேலணை**

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியையும்

பிறப்பு 02 . 03 . 1980



இறப்பு 26 . 02 . 2021

## சுந்தரலிங்கம் சசிசாந்தன்

பூநகரியை பிறப்பிடமாகவும். இன்பர்சிட்டி பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் சசிசாந்தன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 26.03.2021 நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை தீர்த்தக் கடற்கரையில் இடம் பெற்றது.

அன்னாரின் 31ஆம் நாள் நினைவஞ்சலி 28.03.2021 நாளை ஞாயிற்றுக் கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் (வேல் கோவிலடி. இன்பர்சிட்டி) நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்
**077 894 8378, 077 460 8980**

# அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பு

கடந்த 13.03.2021 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வம்

## நடராசா பவளம்

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் நாளை (28.03.2021) ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 5.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து மதியம் 12.00மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் குடும்ப சகிதம் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக தயவுடன் ஏற்றுக் கொள்ளவும்.

**மக்கள், மருமக்கள்**
**பேரப்பிள்ளைகள் சார்பில்**
**மகன் ந.செல்வேள்**
**0772367451**

**கரவெட்டி கிழக்கு,**
**கரவெட்டி.**

# விழிகளுடன் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## சண்முகநாதன் நித்தியலட்சுமி

உலகெங்கும் சிறகடித்துப் பறந்த
பாசப் புறா ஒன்று இன்று சிறகிழந்து போனது
எம் இதயத்தைப் பிழிந்த உங்கள் இழப்பை
- நினைத்து ஏங்கித்தவிக்கின்றோம்
என்றும் உங்கள் நினைவுடன் நாங்கள்
கண்ணீர்ப் பூக்களை
- காணிக்கையாக்குகின்றோம்

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
வட்டாரம் 12 ,
புங்குடுதீவு கிழக்கு, புங்குடுதீவு.

மலர்வு 27.01.1944
உதிர்வு 19.03.2019

# NOTICE
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## OPERATIONAL TECHNICAL SECRETARIAT (OTS) WORLD BANK FUNDED ACCELERATING HIGHER EDUCATION EXPANSION AND DEVELOPMENT (AHEAD) OPERATION

**POST OF RESEARCH ASSISTANT CUM PROJECT ASSISTANT (FULL TIME) – ON CONTRACT BASIS – 01**
**DEVELOPMENT ORIENTED RESEARCH (DOR) PROJECT – FACULTY OF GRADUATE STUDIES**

The University of Jaffna, Sri Lanka will entertain applications for the above mentioned post under OTS – AHEAD Operation from suitably qualified persons up to 09.04.2021.

The Post carries all inclusive monthly salary of Rs.47,800/= in addition applicable EPF & ETF will be paid.

Applicants are requested to visit Jaffna University Website www.jfn.ac.lk for further details.

Registrar

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கனேடியத் தூதுவர் மக் கினொன் யாழ்.பல்கலையில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 27

இலங்கைக்கான கனேடியத் தூதுவர் டேவிற் மக் கினொன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு நேற்றுச் சென்று கலந்துரையாடினார்.

தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டுச் செயற்றிட்டத்தின் தற்போதைய நிலைத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதற்காக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத் திட்டங்கள் தொடர்பாக துணைவேந்தர், பீடாதிபதிகள், பதிவாளர் மற்றும் மொழிபெயர்ப்புக் கற்கைத்துறையைச் சேர்ந்த விரிவுரையாளர்களுடன் அவர் கலந்துரையாடினார்.

கலந்துரையாடலின் முடிவில், கனேடியத் தூதுவருக்கு பல்கலைக்கழகத்தின் சார்பில் நினைவுப் பரிசிலும் வழங்கப்பட்டது.

(த-இ)




**நல்லூர்க்கந்தன் திருமணசேவை**

அரசபணி, தனியார் நிறுவனம், உள்நாடு, வெளிநாடு எல்லாவித மணமக்களுக்கும் ஏற்ற வரன்கள் எம்மிடம் உண்டு.

தொடர்பு:0779733183 வி.ஜெயந்தி

**CHEMISTRY WORLD**

Direct Group Class
Tamil & English Medium

➤ 2022 - Inorganic
➤ 2023 - General

Mr.S.Sureshkumar Bsc (Hons) PGDE
(யாழ் தேசிய பாடசாலை ஆசிரியர்)

TP: 077 555 9028 Brown Road Jaffna


## அஞ்சலி நிகழ்வு இரத்துச் செய்யப்படுதல்


28.03.2021 ஞாயிற்றுக்கிழமையும், 29.03.2021 திங்கட்கிழமையும் நடாத்தப்படவிருந்த, கடந்த 07.03.2021 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது தாயார் **திருமதி வைத்திலிங்கம் கனகம்மா** அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் தவிர்க்க முடியாத தற்போதய நாட்டு நிலமையையும், சுகாதார வைத்திய அதிகாரி அவர்களின் அறிவுறுத்தலின் பெயரில் நிலமையின் பாரதூரத் தன்மையினைக் கருத்திற்கொண்டு இரத்துச்செய்துள்ளோம் என்பதை இத்தால் தெரிவித்துக் கொள்கின்றோம். இதனால் தங்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு வருந்துகின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

**வீ.வை.யோகலிங்கம்.**
**இல 880/4 கே.கே.எஸ் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**077 194 8052**

## என்றும் எங்கள் நினைவுகளில்...

**25 ஆம் ஆண்டு**



அமரர்
**பண்டாரி இராயப்பு**
பிறப்பு : 25.04.1927
இறப்பு : 27.03.1996

**21 ஆம் ஆண்டு**



அமரர்
**எலிசபேத் இராயப்பு**
பிறப்பு : 08.06.1929
இறப்பு : 13.06.2000

**6 ஆம் ஆண்டு**



அமரர்
**Rev.Fr. இராயப்பு மரியநாயம் (O.M.I)**
பிறப்பு : 13.05.1948
இறப்பு : 23.10.2015



உயிரோடு இருக்கும்போது என்னிடம்
நம்பிக்கை கொள்ளும் எவரும் என்றுமே சாகமாட்டார். (யோவான் - 11:26)

குடும்பத்தினர்


**தேவை**

சுன்னாகத்தில் புதிதாக இயங்கும் அச்சகத்திற்கு Computer Typesetting, Book Binding தெரிந்தவர்கள் தேவை.

தொடர்பு:- 077 707 2893

**வாடகைக்கு**

சாவகச்சேரி நகரின் மத்தியில் A-9 வீதியில் (கண்டி வீதி) மேல் கடை (1ம் மாடி) வாடகைக்கு கொடுக்கப்படும்.

077 536 1370, 077 152 6874

**விற்பனைக்கு**

ரெட் லேடி (Red Lady) பப்பாக்கன்று விற்பனைக்கு. தேவையானோர் வந்து பெற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: நியூலங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு மேற்கு பிள்ளையார் கோயில் வீதி அருகாமை.

**தவறிவிட்டது**

K.K.S. வீதி ஊடாக தாவடி வரை உள்ள பயணவழியில் கமலாங்கன்னி. சிவராஜா ஆகியவர்களின் தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர் நியூலங்கா பாமில். (இணுவில்) ஒப்படைக்கவும்.

**அழகிய வீடொன்றினை கட்டவேண்டுமா?**

**10 வருட உத்தரவாதம்**

உங்கள் விருப்பத்திற்கேற்ப கட்ட வேண்டுமா? அல்லது திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டுமா? உங்கள் பணவசதிற்கேற்ப தகுதிவாய்ந்த பொறியியலாளர்களின் மேற்பார்வையின் கீழ் கட்டித் தரப்படும்.

உயர்தர சேவைக்கு அழையுங்கள்.

0778354055, 0776644832

**வீடு வாடகைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் அமைந்துள்ள 4 அறைகள் 2 இணைந்த குளியலறைகள், சாதாரண குளியலறை, Hall with Varanta, சுற்றுமதில், பயன்தரும் மரங்கள், Office ஆகவும் வீடாகவும் பயன்படுத்தலாம். மாத வாடகை 40,000/=

தொடர்புகளுக்கு:
074 027 2778

# ANGEL INTERNATIONAL SCHOOL– MANIPAY

**Vacancy for Biology, Chemistry, Western music and Primary Education Teachers**

Qualified with bachelors' degree and experienced; Chemistry, Biology, Western Music and Primary Education teachers who are able to teach in English medium are required. Applications from experienced retired teachers with good health condition are highly favorable. Please send your application with the attachment of your CV to the following address or e-mail. Attractive salary will be paid for suitable candidates.

**இரசாயனவியல், உயிரியல், மேலைத்தேய இசை மற்றும் ஆரம்ப கல்வி ஆசிரியர்களுக்கான வேலை வெற்றிடங்கள்**

இரசாயனவியல், உயிரியல், மேலைத்தேய இசை மற்றும் ஆரம்ப கல்வி ஆகியவற்றை ஆங்கில மொழி மூலம் கற்பிக்கக் கூடிய அனுபவமுள்ள பட்டதாரி ஆசிரியர்கள் தேவை. அனுபவம் வாய்ந்த, நல்ல உடல் நிலையுடன் கூடிய இளைப்பாறிய ஆசிரியர்களிடமிருந்து வரும் விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும். சுயவிபரக் கோவையுடன் உங்கள் விண்ணப்பங்களை தபால் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்பலாம். கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

Director
Angel International School, Mathers lane, Manipay.
angelism2006@gmail.com

**English for communication (spoken English) for School leavers, Job seekers, employees and Parents.**

ஏஞ்சல் சர்வதேச பாடசாலை, யாழ்ப்பாண, மானிப்பாய் கிளையில் பாடசாலை படிப்பை நிறைவு செய்தவர்கள், தொழில் தேடுவோர் மற்றும் பெற்றோருக்கான English for communication (3மாதங்கள்) கற்கை நெறி, திங்கள், புதன் மற்றும் வெள்ளி கிழமைகளில் மாலை 05 - 07 மணிவரையும் சனி கிழமைகளில் காலை 09 - 11 மணிவரையும் மாலை 04 - 06 மணிவரையும் நடைபெறவுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.


Angel International School offers "English for Communication" (Spoken English - 3 Months) course for school leavers, jobseekers, employers and parents at it's Jaffna and Manipay campus. Course will commence during the week days at Monday, Wednesday and Friday from 5.00 pm to 7.00 pm and Saturdays from 9.00 am to 11.00 am and 4.00 pm to 6.00 pm.

Please contact : Manipay 077 24 58 370
Jaffna 021 222 4118 /077 62 79 298

Angel International school,
No, 14 Rasavin thoddam,
Jaffna.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



மண்ணில் 07 . 01 . 1939

விண்ணில் 26 . 03 . 2021

### சின்னையா ஞானசேகரம்

துன்னாலையைப் பிறப்பிடமாகவும் கல்வயலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா ஞானசேகரம் அவர்கள் நேற்று (26.03.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் கோமதியின் அன்புக் கணவரும், அமரர் அம்பிகையின் அன்புச் சகோதரரும், ரசிகரன் (பிரான்ஸ்), இன்பகரன் (ஆசிரியர், யா/ விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்), ரூபகரன் (பிரதம கணக்காளர், விவசாய அமைச்சு, பத்தரமுல்ல), கிரிஜா (லண்டன்), செல்வகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், வளர்மதி (பிரான்ஸ்), அமரர் யமுனா, சைலஷா (ஆசிரியர், கிளி/பளை இந்து மகளிர் ஆரம்ப வித்தியாலயம்), கல்யாணி (ஆசிரியர், இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு), ராமேந்திரன் (லண்டன்), ஸ்ரீவாணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், தனுஜன், அபிஷா, லோஜன், ஷிந்துஜன், ஹரனிகா, லிந்துஜன், யஸ்விந்த், அஸ்விதா, வீணா, சுருதி, அபிஸ், யாதாஸ், அப்ஷரா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.03.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் கல்வயலில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கல்வயல்,
சாவகச்சேரி.

இன்பகரன் - 077 9848 669
ரசிகரன் - 0033699172434
கிரிஜா - 00447404232918
செல்வகரன் - 0033783596203

தகவல்:
குடும்பத்தினர்.

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 02 . 01 . 1940

மறைவு 07 . 04 . 2020

### அமரர் பொன்னுத்துரை சண்முகசுந்தரம்

திதி - பிரதமை - பூர்வபக்ஷ சதுர்த்தசி

அன்பின் திருவுருவே!
அமைதியின் உறைவிடமே!
கண்முன்னே வாழ்ந்த காலம்
அமைதியாகி போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர்வாழும்
ஆண்டு ஒன்று சென்றாலும்
ஆறவில்லை நம் நெஞ்சம்

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகள்.

கமலேஸ்வரி ரெக்ஸ்
ஜெயலக்ஷன் பென்சி

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தையா நல்லம்மா



கௌதாரிமுனை, பூநகரியை பிறப்பிடமாகவும் இத்தியடிப் பிள்ளையார் கோவிலடி சங்கத்தானை, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நல்லம்மா நேற்று (26.03.2021) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கந்தையா பொன்னு தம்பதியரின் அன்பு மகளும், ஆறுமுகம் வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஆறுமுகம் கந்தையாவின் அன்பு மனைவியும், அன்னமுத்து, கமலாதேவி, கனகரத்தினம் ஆகியோரின் அன்பு சகோதரியும், இந்திரகுமார், இந்திராதேவி, கமலாதேவி, கமலநாதன், ரதிதேவி, யசோதா ஆகியோரின் பாசமிகு தாயாரும், செல்வராணி, உலகநாதன், அரிகரன், யோகலட்சுமி, சசிகரன் ஆகியோரின் மாமியாரும், ஸ்ரீகாந்-பவிதா, அஜந்தன்-பிருந்தா, கிருத்திகா, அஜீபன், தமிழ்குமரன், தமிழ்மாறன், தமிழ்வாணன், சஜீபன், றஜீசன், ஜெசிக்கன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஆதர்சன், ஆதிக்ஷா ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2021) சனிக்கிழமை பி.ப 12.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிறப்பு 07.08.1944

இறப்பு 26.03.2021

இத்தியடி பிள்ளையார் கோவிலடி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாழ்.போதனாவுக்குள்...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடத்திலும், யாழ்ப்பாணம் மருத்துவபீட ஆய்வுகூடத்திலும் நேற்று 634 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் 29 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டது. அவர்களில் 26 பேர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள்.

யாழ்ப்பாணத்தில் நேற்று அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்களில் 19 பேர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர்.

மருத்துவமனையில் தங்கியுள்ள நோயாளர்கள் 6 பேருக்கும், மருத்துவர்கள் 2 பேருக்கும், தாதியர்கள் 3 பேருக்கும், சிற்றூழியர்கள் 4 பேருக்கும், மருத்துவ மாணவர்கள் இருவருக்கும், தாதியப் பயிற்சியாளர் மற்றும் சுத்திகரிப்புப் பணியாளர் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்கள் திருநெல்வேலி சந்தையில் அடையாளம் காணப்பட்ட தொற்றாளருடன் தொடர்பைப் பேணியவர்கள்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் உள்ள கைதிகள் இருவருக்கும் நேற்று வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களுடன் தொடர்பைப் பேணிய காரைநகரைச் சேர்ந்த மூவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த இருவருக்கும் நேற்றுத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்கள் வவுனியா ஆடைத் தொழிற்சாலை கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டது. கொரோனாத் தொற்று அறிகுறிகளுடன் மன்னார் மருத்துவமனை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (எ-26)

### காலை...

மாகாணக் கல்வித் திணைக்களம் அறிவித்தல் விடுத்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் அதிகரித்து வரும் நிலையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-இ)

### மயங்கி...

சம்பவம் நேற்றுமுன்தினம் மருதனார் மடத்தில் நடந்துள்ளது. மாவிட்டபுரத்தைச் சேர்ந்த முத்தையா செல்லத்துரை (வயது-75) என்பவரே உயிரிழந்துள்ளார்.

சைக்கிளில் இவர் மருதனார்மடம் சென்றபோது, திடீரென மயக்கம் ஏற்பட்டு வீழ்ந்துள்ளார். அங்கிருந்தவர்கள் அவரை வீட்டில் சேர்ப்பித்தனர். அதன் பின்னரும் அவருக்கு சுகவீனம் ஏற்பட்டதை அடுத்து உறவினர்கள் அவரைத் தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். அங்கிருந்து நேற்று அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். எனினும் சிகிச்சை பயனின்றி நேற்றுக் காலை உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (எ-26)

### தவறான...

டுள்ளார். செல்வராசா ஜதுர்சன் (வயது-19) என்ற இளைஞரே சடலமாக மீட்கப்பட்டுள் ளார். இவர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது இவரது கைத்தொலைபேசி கீழே விழுந்து உடைந்துள்ளது. அதையடுத்து அவர் புதிய கைத்தொலைபேசி வாங்கித்தருமாறு வீட்டில் கேட்டார் என்று கூறப்படுகின்றது.

கைத்தொலைபேசி வாங்கிக் கொடுக்கப்படாததால் அவர் இந்தத் தவறான முடிவை எடுத்திருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (எ-26)

### முடக்கப்பட்ட....

னாத் தடுப்புச் செயலணியின் அவசர கூட்டம் இடம்பெற்றது. அதில் யாழ்ப்பாணம் நகரத்தின் மையத்தை 10 நாள்களுக்கு முடக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு இந்த விடயம் அறிவிக்கப்பட்டிருந்தபோதும், நேற்றுக் காலை யாழ்ப்பாண நகரத்தின் முடக்கப்பட்ட பகுதிகளில் சில வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டிருந்தன. இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் சுகாதாரத்துறையினர் ஆகியோர் இணைந்து அவற்றை மூடும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். முடக்கத்தை கண்காணிக்க இராணுவத்தினர் வீதிகளில் நிறுத்தப்பட்டிருந்தனர். (ற-20)

### இரு வயது...

செய்யப்பட்டுள்ளது.

சிறுமியின் தாய்க்கு கடந்த 11ஆம் திகதி கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது. அதையடுத்து அவரது குடும்பத்தினர் தனிமைப்படுத்தப்பட்டு, அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அதன் முடிவுகள் நேற்று வெளியான நிலையில், சிறுமிக்கும், தந்தைக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்கள் இருவரையும் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளைச் சுகாதாரத் துறையினர் முன்னெடுத்துள்ளனர். (எ-18)

### மருத்துவமனைக்கு...

துவ சேவைகளும் சுமுகமாக முன்னெடுக்கப்படும் என்று பிரதிப் பணிப்பாளர், மருத்துவர் சி.யமுனானந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையைச் சேர்ந்த 19 பேருக்கு நேற்றுக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது. அதையடுத்து யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையின் உயர்மட்டக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது போதனா வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை உள்ளிட்ட அனைத்து மருத்துவ சேவைகளும் சுமுகமாக முன்னெடுக்கப்படும். கிளினிக் பெறும் நோயாளர்களுக்கு மருந்துகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். நோயாளர்களைப் பார்வையிட வெளியாட்கள் வருவதைத் தவிர்க்கவேண்டும்.

போதனா மருத்துவமனைக்குள் தேவையற்ற நடமாட்டங்களைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். என்றார். (எ-26)

### கொரோனா...

கில் தொல்பொருள் திணைக்க ளத்துக்குரிய பகுதியென அடையாளமிடப்பட்ட பகுதியில் இன்று (நேற்று) துப்பரவுப் பணியில் ஈடுபடவுள்ளோம் என்று நேற்றுமுன்தினம் வலி. கிழக்கு பிரதேசசபை தவிசாளர் தியாகராஜா நிரோஷுக்குத் தொல்பொருள் திணைக்கள யாழ்ப்பாண அலுவலகத்திலிருந்து தகவல் தெரிவிக்கப்பட்டது. எனினும், அதை எழுத்துமூலம் வழங்க வேண்டும் என்று நிரோஷ் கேட்டிருந்தார்.

எனினும், எழுத்துமூலம் தகவல் வழங்காமல் தொல்பொருள் திணைக்களத்தினர் அங்கு பணியை நேற்று ஆரம்பித்தனர்.

அகழ்வுப் பணிகளுக்கு எதிராக மக்கள் ஒன்றுகூடி எதிர்ப்பு வெளியிட்டனர். அதனால் அங்கு பதற்றமான நிலைமை காணப்பட்டது. மக்களின் கடும் எதிர்ப்பால் திணைக்களத்தினர் தங்கள் முயற்சியை இடைநிறுத்தி அங்கிருந்து அகன்றனர்.

அதேவேளை, தொல்லியல் திணைக்களம் முன்னரும் ஒருதடவை நிலாவரையில் அகழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சித்தது. மக்கள் கூடி எதிர்ப்புத் தெரிவித்ததை அடுத்து, அவர்கள் தங்கள் முயற்சியை இடைநிறுத்தியிருந்தனர். (எ-ம)

### சிறிதரன்...

கும்பலே தாக்குதல் நடத்தியுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினரின் மகனும் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார். மோட்டார் சைக்கிள் ஒன்றையும் அந்தக் கும்பல் அடித்து நொருக்கியுள்ளது. கே.கே.எஸ். வீதியில் தனது சகோதரருடன் நின்றிருந்த, அவரது நண்பர்கள் இருவருடன் சில இளைஞர்கள் முரண்பட்டபோது, அவர்களைப் பாதுகாப்பாக வீட்டுக்கு அழைத்து வந்தேன் எனவும், முரண்பட்ட இளைஞர்கள் பின்தொடர்ந்து வந்து தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றனர் என்றும் தாக்குதலுக்கு இலக்கானவர் தெரிவித்துள்ளார்.

தாக்குதல் நடத்தியவர்களுக்கும் தங்கள் குடும்பத்தினருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்தின் பாதுகாப்புக் கமரா பதிவுகளைக்கொண்டு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-இ)

### எல்லை தாண்டி...

இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில், 54 இந்திய மீனவர்கள் நேற்றுமுன்தினம் இரவு இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்களின் 5 மீன்பிடிப் படகுகளும் கைப்பற்றப்பட்டிருந்தன.

இந்தநிலையில் அரசின் தீர்மானத்தின்படி நேற்று இந்திய மீனவர்கள் 40 பேர் விடுவிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஏனைய 14 பேருக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், அவர்கள் விடுவிக்கப்படவில்லை.

தமிழகத்தில் தற்போது தேர்தல் நடைபெறவுள்ளதால், இந்திய அரசின் அழுத்தத்தால் மீனவர்கள் விடுவிக்கப்பட்டிருக்கலாம் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ)

### படை...

வரே உயிரிழந்துள்ளார்.

கடந்த 23ஆம் திகதி யாழ். நகர் வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இவரை, இராணுவ வானம் மோதியது. அதில் படுகாயமடைந்த அவர் இராணுவத்தினரால் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனின்றி நேற்று மாலை அவர் உயிரிழந்தார். (எ-27)

### இத்தாவிலில்....

சேர்ந்த அழகரத்தினம் சற்குணநாதன் என்பவரும், அவரின் மகன்களான 9 மற்றும் 12 வயதுடைய சிறுவர்களுமே உயிரிழந்துள்ளனர்.

விபத்து நடந்த இடத்தில் சிறுவர்கள் இருவரும் உயிரிழந்துள்ளனர். விபத்தில் படுகாயங்களுக்குள்ளான சற்குணநாதன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டுவரும் வழியில் உயிரிழந்துள்ளார்.

இவர் சில டிப்பர் வாகனங்களுக்கு உரிமையாளர் என்றும், மணல் வியாபாரத்தில் ஈடுபடுபவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. சில ஆண்டுகளுக்கு முன்னர் இவர் விற்பனை செய்த டிப்பர் ஒன்றுடனே நேற்று விபத்து நடந்துள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் கூறுகின்றனர்.

இந்த விபத்துத் தொடர்பில் பளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-9,6)

## இனவாத வன்முறைகள்; ஐந்து மனுக்கள் தாக்கல்

கொழும்பு,மார்ச் 27

இனவாத வன்முறை சம்பவங்கள் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஐந்து அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மீதான வாதங்கள், உயர் நீதிமன்றால் நேற்று முன்தினம் ஒத்திவைக்கப்பட்டன.

2014 ஆம் ஆண்டு ஜூன் 15 ஆம் திகதி அதிகாரிகொட, வெலிபிட்டிய, சீனன் வத்த, துந்துவ, பேருவளை, வெலிப்பன்னை உள்ளிட்ட பகுதிகளில் முஸ்லிம்களை இலக்கு வைத்து வன்முறைகள் பதிவாகின. இந்த வன்முறைகளைக் கட்டுப்படுத்த பொலிஸார் தவறியதன் ஊடாக தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன. வன்முறைகளுக்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி, இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

மனுவின் பிரதிவாதிகளாக அப்போதைய பொலிஸ் மா அதிபர் என்.கே. இளங்ககோன் உள்ளிட்ட 9 பேர் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

குறித்த வன்முறை காரணமாக 48 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. இருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர். 80 பேர் படுகாயமடைந்தனர். 17 பள்ளிவாசல்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டன. 2 ஆயிரத்து 248 முஸ்லிம்கள் உள்ளூரில் இடம் பெயர்ந்தனர். 79 முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் சேதமாக்கப்பட்டன என்று மனுதாரர்கள் தமது மனுவில் சுட்டிக்காட்டியுள்ள னர். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமலுக்கு எதிரான பிரேரணை நிறுத்தம்

கொழும்பு, மார்ச் 27
தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், தன்னை தேசப்பற்றாளராக அடையாளப்படுத்திக் கொள்பவருமான அமைச்சர் விமல் வீரவன்சவுக்கு எதிராக, ஐக்கிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்படவிருந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை கைவிடப்பட்டுள்ளது.

இனங்களுக்கிடையில் குரோதத்தை விதைக்கும் விதத்தில் இனவாதத்தைக் கக்குதல் உட்பட மேலும் சில குற்றச்சாட்டுகளை மையப்படுத்தி, குறித்த பிரேரணை அதிஉயர் சபையில் சமர்ப்பிக்கப்படவிருந்தது. சஜித் அணியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரே இதற்கான நகர்வுகளை முன்னெடுத்திருந்தனர். . அரசுக்கு ஆலவட்டம் பிடித்த அமைப்புகள் கூட அதன் செயற்பாடுகளைச் சரமாரியாக விமர்சித்து வருகின்றன. அதுமட்டுமல்ல பௌத்த தேரர்கள் கூட வெளிப்படையாகவே சொற்கணைகளைத் தொடுத்து வருகின்றனர். மறுபுறத்தில் அரச கூட்டுக்குள்ளும், வெளியிலும் பிரச்சினைகள் தலைவிரித்தாடத் தொடங்கியுள்ளன. இவ்வாறானதொரு பின்புலத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை முன்வைத்தால், பொதுவான பிரச்சினைகள் திசைதிருப்பப்படக்கூடும். பிளவுபட்டுள்ள அரச கூட்டணி ஐக்கியமாகக்கூடும். அது வருகின்ற தேர்தலில் அரசுக்கும், விமலின் கட்சிக்குள் சாதகமாக அமையக்கூடும் எனவும் பின்வரிசை எம்.பிக்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்தே நம்பிக்கையில்லாப் பிரேரணை கைவிடப்பட்டுள்ளது. எனினும், அரசுக்கு எதிராக பல வழிகளிலும் போராடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது., (க-44)

# எந்த நேரத்திலும் ஆபத்து ஏற்படும்

## எச்சரிக்கிறார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா

**கொழும்பு, மார்ச் 27**
**ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இந்த நாட்டுக்கு பேரவமானம். இந்தத் தீர்மானத்தால் இலங்கைக்குச் சர்வதேச அரங்கில் எந்தவேளையிலும் பேராபத்து ஏற்படலாம். இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தெரிவித்தார்.**



ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நல்லிணக்கம் பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவது தொடர்பான தீர்மானம் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்படும் என்று முதலிலேயே இலங்கை அரசுக்கு தெரியும். அவ்வாறு தெரிந்து கொண்டு அதற்குச் சவால் விடும் வகையில் இலங்கை அரசு செயற்பட்டது. அந்தச் சவால் தவிடுபொடியாகியுள்ளது.

ராஜபக்ச அரசின் வெளிவிவகாரக் கொள்கை படுதோல்வியடைந்துள்ளது. இது நாட்டுக்குப் பேரவமானம். நாட்டின் இன்றைய மோசமான நிலைக்கு இந்தத் தீர்மானம் சான்றாக அமைந்துள்ளது. இந்தத் தீர்மானத்தால் இலங்கைக்கு சர்வதேச அரங்கில் எந்தவேளையிலும் பேராபத்து ஏற்படலாம். ஏனெனில் பொறுப்புக்கூறல் விடயத்தில் அரசு தட்டிக்கழிப்பதால் சர்வதேசத்தால் இலங்கை மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் மறுபுறத்தில் நிரூபணமாகின்றன. இதனால் சர்வதேச அழுத்தங்கள் மேலும் இலங்கைமீது அதிகரிக்கும். என்ன நடந்தாலும் ஐ.நா.வின் தீர்மானத்துக்கு கட்டுப்பட வேண்டிய நிலை இன்று இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது- என்றார். (ஒ-22)

## வெளிவிவகார செயலர்

# பதவியிலிருந்து தூக்கப்படுகிறார் கொலம்பகே?

கொழும்பு, மார்ச் 27
தற்போது விமர்சனத்துக்குள் சிக்கியுள்ள வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே, அரச உயர்மட்டத்துக்கு நெருக்கமானவர் என்பதால் அவரின் பதவியில் மாற்றம் ஏற்படும் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை தொடர்பாக ஐ.நா.வில் நிறை வேற்றப்பட்டுள்ள தீர்மானத்தால், ஜயநாத்தின் செயற்பாடுகளை ஆளுங்கட்சி உறுப்பினர்களே வெளிப்படையாக விமர்சிக்கத் தொடங்கியுள்ளனர்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விவகாரம் தொடர்பில் முன்வைக்கப்பட்ட பிரேரணை 11 மேலதிக வாக்குகளால் கடந்த 23 ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது.

இப்பிரேரணைக்கு இந்தியா, ஜப்பான், நேபாளம், இந்தோனேசியா மற்றும் பஹ்ரைன் ஆகிய நாடுகள் நடுநிலை வகித்தமையானது இலங்கைக்கு இராஜதந்திர மட்டத்தில் ஏற்பட்ட தோல்வியாகவே கருதப்படுகின்றது.

எனவே தான் இந்தியாவின் ஆதரவைப் பெறுவதற்கு ஆரம்பம் முதலே இலங்கை முனைப்புக் காட்டியது. மறுபுறத்தில் தமிழகத்தில் தேர்தல் நடைபெறுவதால், இந்தியாவுக்கு முடிவெடுப்பது கடினம் என்று முன்கூட்டியே வெளிவிவகார அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

மேற்குலகையும் கடுமையாக விமர்சித்தார். இந்த நிலையில் அவரது பதவியில் விரைவில் மாற்றம் ஏற்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

(க-44)

**காணி தேவை**

மாநகர சபை, கோப்பாய், நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட இடத்தில் 20 தொடக்கம் 30 வரையான பரப்பளவு காணி தேவை. தரகர் தேவையில்லை

தொடர்புக்கு 076 221 2037

**வீட்டு பணிப்பெண் தேவை**

வீட்டு வேலை செய்வதற்கும், தங்கிநின்று 2 வயது குழந்தையைப் பராமரிப்பதற்கும் அனுபவமுள்ள பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 077 191 9859

**விற்பனைக்கு**

பெருக்கன், கட்டு, பூச்சு மணல், சல்லி, கண்டகல், சீமெந்துக் கற்கள்
தேவைப்படின் நேரடித் தொடர்புக்கு அழைக்கவும்

076 760 3066, 075 842 6302

**மணமகள் தேவை**

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த வயது 32, 8இல் செவ்வாய் கிரக பாவம் 91 ஆசிரியருக்கு மணமகள் தேவை.

தொடர்புக்கு: 077 1135 737

**கடை வாடகைக்குத் தேவை**

சாவகச்சேரி நகரப் பகுதியின் பிரதான வீதியில் அமைந்துள்ள கடை ஒன்று வாடகைக்குத் தேவை.

தொடர்புக்கு: 0777 262 447

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் நல்லூர் கோயில் வீதியில் மெயின் றோட்டுடன் முடமாவடிச் சந்திக்கு அருகாமையில் 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
(நல்லூர் முருகன் ஆலயத்திலிருந்து 250 M தூரம்)

தொடர்பு: 0772880152, 0774683354

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், புன்னாலைக் கட்டுவன், அச்செழு வீதியில் 40 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
(1 1/2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்)
பலாலி வீதியில் அருகாமையில் இக்காணி உள்ளது.
விலை பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
077 6323041, 076 7070 743

**உடுப்பிட்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்க பொன்விழா - 2021 நிகழ்வு நிறுத்தம்**

சங்கத்தின் 50வது ஆண்டினை முன்னிட்டு இன்று (27.03.2021) சனிக்கிழமை நடைபெறவிருந்த பொன்விழா நிகழ்வுகள் தற்போதைய சூழ் நிலை காரணமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதனை மனவருத்தத்துடன் அறியத் தருகின்றோம்.

விழாக் குழுவினர்.

**கடை, காணி விற்பனைக்கு**

1) நுணாவில் A9 வீதியோடு 12 பரப்புக்காணி
2) கோப்பாய் இராச பாதை வீதியில் 7 பரப்புக்காணி (1, 1/2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்)
3) யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் 1 1/2 பரப்புடன் கடை
4) ஊரெழு அம்மன் கோவிலுக்கு அருகாமையில் பலாலி வீதியிலிருந்து 100 மீற்றர் அருகில் 44 பரப்புக் காணியுடன் வியக்கத்தக்க அளவுடைய களஞ்சிய சாலை (Store) அமைந்துள்ளது.

☆ விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
077 275 7484, 021 221 3777

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 36 ... இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.